இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 19 சோபகிருது வருடம், ஆடி மாதம் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(18.07.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 29, 0115 886187 - பக்கங்கள் 10 விலை ரூ.50

BEAT the HEAT The Reliable Fan
1st July to 31st July 2023
DISCOUNT 15% (On selected models only) *Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# ரணில் எதையும் செய்யவில்லை: அமெ.தூதுவரிடம் எடுத்துரைப்பு!



## தமிழ்க்கட்சிகளின் தலைவர்களால் நேற்று ஜூலியிடம் முக்கிய விவகாரங்கள் சுட்டிக்காட்டு

நமது நிருபர்

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்க அளித்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லையென்பதை தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிடம் சுட்டிக்காட்டினர்.

நேற்று (17) கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களை ஜூலி சங் சந்தித்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகிய கட்சித் தலைவர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

02 பக்கம்

## எம்.பிக்களின் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் ஆராய பாராளுமன்ற விசேட குழு



பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவுடன் சம்பந்தப்பட்ட கருமங்களை விசாரிப்பதற்கும் அதுதொடர்பாக பொருத்தமான விதப்புரைகளை மேற்கொள்வதற்குமான பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமிப்பது தொடர்பான பிரேரணையை நாளை(இன்று18) பாராளுமன்றத்தில்...

02 பக்கம்

## நாட்டின் நீதித்துறையிலும் தேர்தல் ஆணைக்குழுவிலும் செல்வாக்கு செலுத்த அரசாங்கம் முயற்சி

### புதிய நடவடிக்கை குறித்து சாடுகிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



அரசாங்கம் திடீரென பாராளுமன்ற அலுவல்களுக்கான குழுக் கூட்டத்துக்கு நேற்று (17) அழைப்பு விடுத்து, இன்றைய (18) தினம் நாட்டின் தேர்தல் வேலைத்திட்டத்தில் தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அங்கத்தவர்கள் எவ்வாறு செயற்பட்டனர் என்பது குறித்து ஆராய...

02 பக்கம்

கமெண்ட் கந்தர்...



பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை என்று கூப்பிட்டு சூடாக ரீயும் சாப்பிட கேக்கும் கொடுத்தனுப்புவாரெல்லே ரணில்... அவர் ஒன்றுமே செய்யவில்லை எண்டு பொய் சொல்லக்கூடாது பாருங்கோ..!

## தடுப்பூசி பெற்ற குழந்தை மரணம்

### குளியாப்பிட்டியில் பரிதாபம்

நா. தினுஷா

தடுப்பூசி பெற்றுக்கொண்டதன் பின்னர் ஏற்பட்ட திடீர் உடல் உபாதையினால் நேற்று முன்தினம் (16) மேலுமொரு குழந்தை உயிரிழந்துள்ளது.

குளியாப்பிட்டி பிரதேசத்தில் இந்த உயிரிழப்புச் சம்பவம் பதிவாகியுள்ளது.

அதற்கமைய, தடுப்பூசி பெற்றுக் கொண்டதன் பின்னர் திடீரென நோய் வாய்ப்பட்டதாக தெரிவிக்கப்படும் நான்கு மாதக் குழந்தை, நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக குளியாப்பிட்டி தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

02 பக்கம்

## தமிழர்களின் நிலை என்ன? குருந்தூர் அட்டூழியம் சாட்சி

### சர்வதேச சமூகம் உடன் எதிர்வினையாற்ற வேண்டும் என்று சம்பந்தன் எம்.பி. கோரிக்கை



''இலங்கையில் தமிழ் மக்களுடைய நிலைமை தற்போது எப்படி இருக்கின்றது என்பதை சர்வதேசத்துக்கு குருந்தூர் மலை சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது. சர்வதேச சமூகம் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டும்...

02 பக்கம்

## சீன அரசியல் பிரமுகர் இலங்கைக்கு விஜயம்



சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் யுவான் ஜியாஜுன் நாளை 19ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதரகம் ட்விட்டர் பதிவொன்றினூடாக இதனை அறிவித்துள்ளது.

நாளை நாட்டுக்கு வருகை தரவுள்ள அவர், 23ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர், சீனாவின் Chongqing நகர சபையின் செயலாளராகவும் கடமையாற்றுவதாக அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பெண்ணை தாக்கிய சார்ஜன்ட் கைது



பெண் ஒருவரை கைவிலங்கிட்டு கொடூரமான முறையில் தாக்கிய குற்றச்சாட்டில், ஜா-எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை, வத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வத்தளை பொலிஸ் நிலையத்தின் வாக்குமூலம் பதிவு செய்யப்படும் அறைப் பக்கத்திலிருந்து பெண்ணொருவரின் அலறல் சத்தம் கேட்டு வத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இதுபற்றி விசாரித்துள்ளார்.

02 பக்கம்

## வைத்தியசாலை உயிரிழப்புகளில் சுகாதார அமைச்சரும் குற்றவாளி



### அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலர் ஹரித அளுத்கே

சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல உண்மையாக செயற்பட்டாலும் தற்போது இடம்பெறும் தரமற்ற மருந்துகளின் பயன்பாடு மற்றும் அதனால் இடம்பெறும் உயிரிழப்புகள் தொடர்பான விவகாரத்தில் அவரும் குற்றவாளியாவார்.

02 பக்கம்

## திடீர் மரணங்களை ஆராய ஐவரடங்கிய விசேட குழு

### அமைச்சர் கெஹேலிய நியமித்தார்



நா. தினுஷா

நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் மரணங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்திம ஜீவேந்திர தலைமையில் ஐவரடங்கிய குழுவொன்று சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவினால் நியமிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்தியசாலைகளில் கடந்த சில மாதங்களாக இடம்பெற்றுவரும் மரணங்கள் தொடர்பில் விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதே இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள...

02 பக்கம்




ஜனாதிபதி ரணில் ஜனாதிபதி தேர்தலொன்றுக்கு செல்லாமல் பாராளுமன்ற தேர்தல் ஒன்றை அறிவிக்கலாமென பேச்சு எழுந்துள்ளதால், மாவட்ட ரீதியாக கட்சிக் கூட்டங்களை நடத்தும் வேலைகளை ஆரம்பித்துள்ளது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன.

பாராளுமன்ற தேர்தல் ஒன்று வருமாயின் ஐக்கிய தேசியக் கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணைந்த கூட்டணி ஒன்று களமிறங்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாக தகவல்.

## நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசை பலப்படுத்திவிடும்

### அரசுக்கு எதிரான புதிய யுக்தியை வலியுறுத்தும் கம்மன்பில



நா. தினுஷா

அரசாங்கத்துக்குள் பல்வேறு உள்ளக நெருக்கடிகள் இருக்கின்றன. அவ்வாறிருக்கையில், சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டுவந்தால் அது அரசாங்கத்தை ஐக்கியப்படுத்திவிடும். இதில் எனக்கு சிறந்த அனுபவம் இருக்கிறது.

02 பக்கம்

## தரமற்ற மருந்து விநியோகத்துக்கு எதிராக பல இடங்களில் ஆர்ப்பாட்டம்

### பிரதான அரச வைத்தியசாலைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

நா. தினுஷா

அரச வைத்தியசாலைகளுக்கு தரமற்ற மருந்துகளை விநியோகிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளிட்ட மேலும் சில முக்கிய வைத்தியசாலைகளில் பணியாளர்களினால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன் காரணமாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையை அண்மித்த பிரதேசங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று (17) நடவடிக்கை எடுத்திருந்தனர்.

02 பக்கம்

# தமிழர் விவகாரத்தில் அமெரிக்கா பார்வையாளராக இருக்கக்கூடாது

## தூதுவரிடம் சுட்டிக்காட்டிய சம்பந்தன்



"தமிழர்களுக்கு எதிராக நாட்டில் அரங்கேறும் விடயங்கள் தொடர்பில் அமெரிக்கா மௌனமாக - பார்வையாளர்களாக இருக்கக்கூடாது. நீங்கள் பார்வையாளர்களாக இருந்தால் வடக்கு, கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்தவர்கள் என்பது அழிக்கப்பட்டு - உரிமைகளை இழந்து அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாமல் ஒதுங்க வேண்டிய நிலைமை ஏற்படும்."

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், தன்னை நேரில் சென்று சந்தித்தபோது மேற்கண்டவாறு கூறியதாகக் குறிப்பிட்ட சம்பந்தன், இந்தச் சந்திப்பு தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

"கடந்த வியாழக்கிழமை அமெரிக்கத் தூதுவர் என்னை வந்து சந்தித்தார். முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். நல்லதொரு சந்திப்பு. மாலை 5.30 மணி முதல் 6.45 மணி வரை என்னுடன் அவர் பேசினார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை, அரசியல் தீர்வு விடயம், தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்படுகின்ற பல்வேறு விதமான மாற்றங்கள், தமிழ்பேசும் மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து - தமிழ்பேசும் மக்களின் சரித்திர ரீதியான இடங்களை அழித்துவிடும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் முயற்சிகள், வடக்கு - கிழக்கில் இராணுவப் பிரசன்னத்தின் அதிகரிப்பு மற்றும் வடக்கு - கிழக்கு மீளிணைப்பு தொடர்பில் அவரிடம் எடுத்துரைத்தேன்.

இந்த நடவடிக்கைகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களுக்கு முரணானவை என்றும் அவரிடம் சுட்டிக்காட்டினேன்.

பொறுப்புக்கூறல் உள்ளிட்ட ஐ.நா. தீர்மானங்களின் பரிந்துரைகளை இலங்கை அரசு இன்னமும் நடைமுறைப்படுத்தாமல் அசட்டையீனமாகச் செயற்படுகின்றது என்றும் அமெரிக்கத் தூதுவரிடம் கூறினேன்.

இந்த விடயங்கள் தொடர்பில் நீங்கள் மௌனமாக - பார்வையாளர்களாக இருக்கக்கூடாது. நீங்கள் பார்வையாளர்களாக இருந்தால் வடக்கு, கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்தவர்கள் என்பது அழிக்கப்பட்டு - உரிமைகளை இழந்து - அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாமல் ஒதுங்க வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே, தமிழ்பேசும் மக்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்க வேண்டும் என்றும் கூறினேன்.

ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு தமிழ்பேசும் மக்கள் சுய மரியாதையுடன் - சுய கௌரவத்துடன் - சகல உரிமைகளுடன் சந்தோசமாக வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்றும் தெரிவித்தேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தக் கருமங்களை நிறைவேற்றுவாரா என்று அமெரிக்கத் தூதுவர் என்னிடம் கேட்டார். "நானும் அவரும் 1977ஆம் ஆண்டு பாராளுமன்றத்துக்கு ஒன்றாக வந்தோம். அவரைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். அவர் இனவாதி அல்லர். அவருக்குப் போதிய ஆதரவு இருந்தால் இந்தக் கருமங்களை அவரால் நிறைவேற்ற முடியும் என்று தெரிவித்தேன்" என்றார்.

# வீட்டு வேலைக்குச் சென்ற லிந்துலை பெண் மீது குண்டூசி குத்தி சித்திரவதை

## அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகின

லிந்துலை, கிளனிகல்ஸ் தோட்டத்தில் 30 வயதுடைய இளம் தாய் ஒருவர் குடும்ப வறுமை காரணமாகவும் சொந்தமாக வீடு ஒன்றை நிர்மாணிக்கும் நோக்கிலும் கடந்த ஜூன் மாதம் கொழும்பில் உள்ள முகவர் மூலம் சவூதி நாட்டுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக சென்றுள்ளார்.

குறித்த பெண்ணுக்கு அந் நாட்டு மொழி தெரியாத காரணத்தால் வீட்டு உரிமையாளர் கடுமையாக தாக்கி சித்திரவதை செய்யப்பட்ட நிலையில் நாடு திரும்பியுள்ளார்.

இந்நிலையில் சவூதியில் தொழில் வழங்கிய வீட்டு உரிமையாளரின் மனைவி குறித்த பெண், தான் குளிப்பதற்காக குளியலறைக்கு சென்று குளித்துவிட்டு வரும்போது குறித்த வீட்டின் எஜமானி இவரை கடுமையாக தாக்கி குண்டு ஊசிகளை உடம்பு முழுவதிலும் பலவந்தமாக குத்தி சித்திரவதை செய்யப்பட்டதாக தனது கணவனுக்கு குரல் பதிவு ஊடாக அனுப்பிவைத்துள்ளார்.

கணவன் மற்றும் அவரின் உறவினர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த முகவர் மற்றும் உபமுகவர் இருவரிடமும் இச்சம்பவம் தொடர்பாக பல முறை தெரிவித்த போதிலும். பணம் கொடுத்தால் மீண்டும் நாட்டுக்கு எடுத்து தருவதாகவும் உபதரகர் அச்சுறுத்தியதாக கணவன் தெரிவிக்கின்றார்.

சவூதி நாட்டில் உள்ள வெளிநாட்டு பணியகத்துக்கு தெரிந்தவர் ஒருவரின் உதவியுடன் குறித்த பெண் இலங்கைக்கு கடும் உடல் சுகயீனமுற்ற நிலையில் வந்ததால் உறவினர்களால் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் வைத்தியர்கள் பரிசோதனை செய்தபோது உடம்பில் அதிகமான குண்டு ஊசிகள் இருப்பது தெரியவந்துள்ளது. உடம்பில் இருந்து இதுவரை நான்கு குண்டு ஊசிகள் அகற்றப்பட்டுள்ளதுடன் இன்னும் நான்கு ஊசிகள் உடம்பில் இருப்பதுடன் இதனை அகற்ற வைத்தியர்களால் திகதியும் வழங்கப்பட்டுள்ளது.



இது தொடர்பாக அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் குறித்த பெண்ணின் கணவர் முறைப்பாடு செய்துள்ளார்.

### ரணில் எதையும் செய்யவில்லை:...

இந்த சந்திப்பின் பொழுது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் என தமிழ் கட்சிகள் ஒவ்வொன்றினதும் நிலைப்பாட்டை அறிவதில் அமெரிக்க தூதுவர் ஆர்வம் காட்டினார்.

சந்திப்பில் கலந்து கொண்ட அனைத்து தலைவர்களும், "ரணில் விக்கிரமசிங்க ஒரு லிபரல் வாதிதான். ஆனால் அவர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பார் என நம்பவில்லை" என்ற சாரப்பட கருத்து தெரிவித்தனர்.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்க அளித்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லையென்பதை தமிழ் தரப்பினர் சுட்டிக்காட்டினர்.

பதவியேற்ற பின்னர் சிறியளவிலான காணி விடுவிப்பு மாத்திரமே நிகழ்ந்தது. அரசியல் கைதிகள் இன்னும் சிறைகளில் உள்ளனர். இனப்பிரச்சினைக்கான தீர்வை ஜூலைக்குள் வழங்குவதாக தெரிவித்தார், ஆனால் எதுவும் நடக்கவில்லையென்பதை தமிழ் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்து அமுலில் உள்ளதையும், பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைபு என அரசாங்கம் ஒரு நகர்வை செய்ததாகவும் அது இப்பொழுது என்ன கட்டத்தில் உள்ளதென்பது தெரியவில்லையென்றும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டுமென்றும் தமிழ் தரப்பினர் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமெரிக்க தூதர், உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் பயங்கரவாதம் தொடர்பான சட்டமூலங்கள் உள்ளன என்றார்.

இதற்கு பதிலளித்த எம்.ஏ.சுமந்திரன், தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டம் மோசமானது. அதை முற்றாக முதலில் நீக்கிவிட்டு, அதன் பின்னர் என்ன செய்யலாமென்பதை அனைத்து தரப்பும் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரலாம் என்றார்.

அண்மையில் நடந்த குருந்தூர்மலை விவகாரம் மற்றும் அரசாங்கம் தமிழர்களின் காணி பறிப்பது உள்ளிட்ட விவகாரங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டது. இந்த சந்திப்பின் போது, சர்வதேச சமூகம் இலங்கை மீது அழுத்தம் பிரயோகிப்பது போதாது என தமிழ் தரப்பினர் அனைவருமே வெவ்வேறு கட்டங்களில் குறிப்பிட்டனர்.

ஒரு கட்டத்தில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சர்வதேசத்தின் தலையீடு போதாது என்ற சாரப்பட தெரிவித்தார்.

உனே ஜூலி சங், "அனைத்துக்குமே சர்வதேசம் சர்வதேசம் என கூறக்கொண்டு, எதிர்பார்த்துக் கொண்டிருக்காதீர்கள். சர்வதேசத்துக்கும் சில வரையறைகள் உள்ளன" என்றார்.

வழக்கமான- ஒரு சந்திப்பாக நேற்றைய சந்திப்பு அமைந்ததாக அறியமுடிந்தது.

### நம்பிக்கையில்லாப் பிரேரணை...

எனவே, அரசாங்கத்தை தோற்கடித்து எதிர்க் கட்சியின் பலத்தை நிரூபிப்பதற்கான முன்னேற்பாடுகளுடனேயே நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க வேண்டும் என்று பிவித்துரு ஹெலஉருமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

மேலும், தற்போதைய நிலைமையில் எதிர்க் கட்சியின் செயற்பாட்டினால் அரசாங்கம் பலமடைவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (17) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

சுகாதார அமைச்சு உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்கத்தின் மீதும் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது. அரசாங்கத்துக்குள் உள்ளக நெருக்கடியும் இருக்கிறது. எனவே, எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்து அரசாங்கத்தை மீண்டும் ஐக்கியப்படுத்த முயற்சிக்கக் கூடாது.

இந்த அரசாங்கத்தில் நாங்களும் பங்காளர்களாக இருந்திருக்கிறோம். எனக்கு சிறந்த அனுபவமும் இருக்கிறது. பெசில் ராஜபக்ஷவின் செயற்பாடுகளுக்கு எதிராக அரசாங்கத்துக்குள்ளேயே எதிர்ப்புக்களை உருவாக்கியிருந்தோம். அதன் பலனாகவே, அரசாங்கம் எரிபொருள் விலையை அதிகரித்து விட்டதாக தெரிவித்து எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்தார்கள். அதன் விளைவாக, அரசாங்கத்தில் பங்காளர்களாக இருக்கும் தலைவர்கள் இணைந்து பிரிந்திருக்கும் அரசாங்கத் தரப்பினரை மீண்டும் ஐக்கியப்படுத்தினார்கள்.

மருந்து தொடர்பில் பிரச்சினை இருக்கிறது என்பது உண்மையாகும். அதற்காக அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து அரசாங்கத்தை பலப்படுத்தக் கூடாது. பாராளுமன்றத்தில் இறுதியாக இடம்பெற்ற இரு வாக்கெடுப்புகளிலும் இறுதி தருணத்தில் அரசாங்கத்துக்கே வெற்றிகிடைத்தது. எதிர்க் கட்சியிலுள்ள பெரும்பான்மையானவர்கள் வாக்கெடுப்பில் பங்குபற்றவும் இல்லை.

இந்த பின்னணியில், முன் ஏற்பாடுகள் எதுவுமின்றி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தால் அது அரசாங்கத்தை பலப்படுத்தும் செயற்பாடாக அமைந்துவிடும்.

அவ்வாறு நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டுவருவதானால் அரசாங்கம் பலமற்றது என்பதையும் எதிர்க்கட்சியின் பலத்தை நிரூபிக்க கூடியதாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்திக் அதனை செய்யவேண்டும். இதில் மனதில் தோன்றும் விடயங்கள் அனைத்தையும் செய்துவிடமுடியாது. சிந்தித்து செயற்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறு இல்லாவிட்டால் எதிர்க் கட்சியின் செயற்பாட்டினால் அரசாங்கம் பலமடைவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன என்றார்.

### தரமற்ற மருந்து...

கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளிட்ட சிலாபம் பொது வைத்தியசாலை, மாத்தறை உள்ளிட்ட நாட்டிலுள்ள பல்வேறு பிரதான வைத்தியசாலைகளில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அப்பாவி மக்களின் உயிர்களை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் பணியாளர்களின் பாதுகாப்புக்காகவும் வீதிக்கு இறங்கி போராடவுள்ளோம். அதன் முதல் கட்டமாகவே இந்த எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம் என்று அகில இலங்கை தாதியர் சங்கத்தின் செயலாளர் எஸ்.பீ.மெதிவத்த தெரிவித்தார்.

இதன் காரணமாக தேசிய வைத்தியசாலையின் பெரும்பாலான செயற்பாடுகள் நேற்று பாதிப்படைந்திருந்ததுடன், வைத்தியசாலையை அண்மித்த பிரதேசங்களில் போக்குவரத்து தடையையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சிகிச்சைக்காக வந்திருந்த நோயாளர்களும் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டிருந்தார்கள்.

மருந்து பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடி தீர்வைப் பெற்றுக்கொடுக்காவிட்டால் அரசாங்கத்து எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய நேரிடும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

### பெண்ணை தாக்கிய...

அப்போது, நெற்றியில் இரத்தக் காயத்துடன் கைவிலங்கிடப்பட்ட நிலையில் பெண் ஒருவரை காண முடிந்துள்ளது.

மேலதிக விசாரணையில், வத்தளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே அவரைத் தாக்கியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரித்த போது, தாக்குதல் நடத்திய சார்ஜன்ட், ஜா-எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என தெரியவந்துள்ளது. இவர் வத்தளை பொலிஸில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பணியாற்றி வந்தார். அப்போது அவருக்கும் அந்த பெண்ணுக்கும் இடையே நட்புறவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அந்தப் பெண் பணப்பிரச்சினை காரணமாக, பொலிஸ்காரரிடம் கடன் கேட்டுள்ளார். பொலிஸ்காரர் தனது முச்சக்கர வண்டியை அடகு வைத்து 400,000 ரூபாவை பெண்ணிடம் கொடுத்துள்ளார்.

இந்தப் பெண் நேற்றுமுன்தினம் (16) மாலை வீட்டுப் பணிப்பெண்ணாக வெளிநாட்டுக்குச் செல்லத் தயாராகி வந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதையறிந்த சார்ஜன்ட் அவரிடம் பணம் கேட்டதாகவும் அதில் ஒரு பகுதியை தருவதாகவும் மீதியை பின்னர் தருவதாக கூறியதாகவும் கூறப்படுகிறது.

வத்தளையில் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட நிதி நிறுவனத்துக்கு அருகாமையில் பணப் பரிமாற்றத்தை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பொலிஸ் சார்ஜன்ட் சீருடையில் அங்கு வந்திருந்தார். முழுத் தொகையையும் கேட்டு இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். வாக்குவாதம் முற்றியதையடுத்து, அந்த சார்ஜன்ட், பெண்ணை அடித்து கைவிலங்குடன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்துள்ளார்.அப்போதே விடயம் அம்பலமானது. சந்தேக நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

### தமிழர்களின் நிலை...

உடன் எதிர்வினையாற்ற வேண்டும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கோரியுள்ளார்.

குருந்தூர்மலை சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"குருந்தூர்மலைக்கு நீதிமன்றத்தின் அனுமதியுடன் பொங்கலுக்குச் சென்ற தமிழ் மக்கள் மீது பிக்குகள் தலைமையிலான சிங்களவர்களும் பொலிஸ் படைகளும் அட்டூழியம் புரிந்துள்ளனர். இந்தக் குழுவினர் தமிழ் மக்களைப் பொங்கல் செய்யவிடாது திருப்பியனுப்பியுள்ளனர். இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

நீதிமன்றத்தின் அனுமதி இருந்தாலோ - இல்லாவிட்டாலோ எங்களுடைய சொந்தச் சமயத்தைப் பின்பற்றுவதற்கு - சமயத்தலங்களை வழிபடுவதற்குச் சுதந்திரம் உண்டு. அந்தச் சுதந்திரத்தைப் பொலிஸ் படைகளும் பிக்குகளும் தடுக்கலாம் என்ற நிலை இருந்தால் இந்த நாட்டில் தமிழ் மக்கள் சுதந்திரமாக - கௌரவமாக வாழ்வதற்கு இடமில்லை என்பதை இது வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் மக்கள் மீதான இந்த அட்டூழியத்தை - அராஜகத்தை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இது தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் அரசும் அமைச்சரவையும் பொலிஸ்மா அதிபரும் உடனடியாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.

### வைத்தியசாலை...

இந்த பிரச்சினை தொடர்பில், பல்கலைக்கழகம் மற்றும் தனியார் துறையிலுள்ள இரசாயன ஆய்வுக்கூடங்களை பயன்படுத்துதல் அல்லது மாற்று தீர்வுகளை எடுப்பதனூடாக குறைந்தது 06 மாதங்களில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க கூடியதாக இருக்கும் என்றும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (17) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்து த் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது பயன்பாட்டில் இருக்கும் தரமற்ற மருந்து வகைகள் மற்றும் அதனால் ஏற்படும் மரணங்களினால் சுகாதார துறைமீதுள்ள நம்பிக்கை தற்போது இல்லாமல் போயுள்ளது. இந்த விவகாரத்தில் சமூகத்தின் மத்தியில் சுகாதார அமைச்சரும் குற்றவாளியாவார். எனவே, இந்த பிரச்சினையில் உண்மை நிலை என்னவென்பதை உறுதியாக குறிப்பிட முடியாவிட்டாலும் சுகாதார சேவை அதிகாரிகள், ஆய்வுகள் என்பவற்றுக்கு சுகாதார அமைச்சரே பொறுப்பாக இருக்கிறார். மக்களின் மத்தியில் அமைச்சரே குற்றவாளியாக இருக்கிறார்.

பாராளுமன்றத்தில் அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அமைச்சர் எவ்வளவு உண்மையாக செயற்பட்டாலும் அவரால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கை தொடர்பான அங்கீகாரம் இல்லாமல் போவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, சுகாதார அமைச்சர் என்பதற்கு அப்பால் ஜனாதிபதியின் தலையீட்டுடன் இவ்வாறான குழுக்களை நியமிப்பது சிறந்ததாக இருக்குமென நம்புகிறோம்.

சர்வதேச தரத்திலான இரசாயன ஆய்வுகூடமொன்றை எமது நாட்டில் நிறுவ வேண்டுமென்றால் 2 – 3 வருடங்களாவது தேவைப்படும். அதுவரையில் பொறுத்திருக்க வேண்டியதில்லை. இந்த சர்வதேச தரத்திலான இரசாயன ஆய்வு கூடத்தை அமைக்கும் அதேவேளை, தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வுகளை வழங்க முடியும்.

பல்கலைக்கழகங்களிலுள்ள ஒருசில இரசாயன ஆய்வுக்கூடங்கள், தனியார் துறையிலுள்ள இரசாயன ஆய்வுகூடங்கள் அல்லது சரியான மாற்றுத்தீர்வுகளை தெரிவு செய்து முறையான வகையில் பயணித்தால் குறுகிய ஆறு மாதங்களில் இந்த பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியும்.

இதுவரையில், உயிரிழந்தர்களின் உயிரை மீண்டும் பெற்றுக்கொடுக்க முடியாது. இறந்தவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்றால் இதுபோன்ற உயிரிழப்புக்கள் மீண்டும் இடம்பெறுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகும் என்றார்.

### தடுப்பூசி பெற்ற...

குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹல கொம்கொமுவ பிரதேசத்தைச் சேர்ந்த டபிள்யூ.ஏ.எஸ். நிமினாதி என்றழைக்கப்படும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

சுவாசிப்பதற்கு ஏற்பட்ட சிரமம் காரணமாக குறித்த குழந்தை குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னரே குழந்தை இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த குழந்தைக்கு கடந்த 15 ஆம் திகதி ஹெட்டிபொல சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்தினால் நான்கு மாதத்தில் பெற்றுக்கொடுக்கப்படும் ஊசியை பெற்றுக் கொடுத்துள்ளதுடன் மறுநாள் குழந்தை இவ்வாறு நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் குழந்தையின் தந்தை குறிப்பிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த உயிரிழப்புச் சம்பவம் தொடர்பில் குளியாப்பிட்டி தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### நாட்டின் நீதித்துறையிலும்...

தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்விடயத்தில் அரசாங்கம் மெல்ல கவனம் செலுத்தி புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் ஆணைக்குழு மீதும் நீதிமன்றத்தின் முன்னுள்ள விசாரணைகளிலும் செல்வாக்குச் செலுத்தி ஜனநாயக நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்துவதற்கு பதிலாக அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்காக நீதித்துறை மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவில் இது செல்வாக்கு செலுத்தும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (17) விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.அவர் மேலும் கூறியுள்ளதாவது ,

இன்றைய தினம் பாராளுமன்றத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பான தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளமையானது தற்போதைய தேர்தல் ஆணைக்குழு அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்,வரம்புகளுக்குள் செயல்பட வேண்டும் என்பதையும் இல்லாவிட்டால், பாராளுமன்றத் தெரிவுக் குழு முன் ஆஜராக வேண்டும் என்ற தெளிவான முறையற்ற அச்சுறுத்தல் விடுப்பதற்குமேயாகும்.

அதேபோன்று மேலான நீதிமன்ற நீதிபதிகள் அரசின் கருத்துக்களுக்கு ஏற்ப செயல்படவில்லை என்றால்,நீதிமன்ற உத்தரவுகளை அமுல்படுத்தவில்லை என்றால் மேலான நீதிபதிகளை தெரிவுக் குழு முன் கொண்டு வந்து அழுத்தம் கொடுக்கவும் முடியும் என்பதை இது தெளிவாக உணர்த்துகிறது. இந்த அரசியல் சூதாட்டதை இந்த அரசியல் சூனியத்தை நடைமுறைப்படுத்தி வங்குரோத்தடைந்த நாட்டில் முறைமை மாற்றம் ஏற்படும் என அனைவரும் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் காலாவதியான மக்கள் வெறுத்த பழைய முறைமையையே இந்த தெரிவுக் குழுவின் ஊடாக தொடர்ந்தும் நடக்கும் .

உண்மையில், இந்த அரசாங்கம் அதன் நடவடிக்கைகளின் மூலம் மக்களின் இறையாண்மையையும் சர்வஜன வாக்குரிமையையும் மக்களுக்கு மறுக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறல் என்ற தொனிப்பொருளில் அரசாங்கம் நீதிமன்றத்துக்கும் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் அழுத்தம் கொடுக்க முயற்சிக்கப்படுகிறது.பாராளுமன்றத்திலுள்ள மொட்டு உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் அல்லாது 220 இலட்சம் மக்களினது சிறப்புரிமைகளும் உரிமைகளுமே மீறப்பட்டுள்ளன .

இதன் ஊடாக நீதித்துறையின் சுதந்திரத்தை இல்லாதொழிக்க இடமளிக்க மாட்டோம். சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற தேர்தல் ஆணைக்குழு மீது செல்வாக்கு செலுத்த இடமளிக்க மாட்டோம். தனியாகவன்றி எதிர்க்கட்சியின் சகல தரப்புகளையும் ஒன்றாய் இணைத்துக் கொண்டு 220 இலட்சம் மக்களின் நலனுக்காக நீதித்துறையின் சுதந்திரத்தையும் தேர்தல் ஆணைக்குழுவின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தை வலுப்படுத்தவும் செயற்படுவோம். ஜனநாயகத்தை அழிக்க இந்த அரசாங்கம் எடுக்கும் கூட்டுச் சதி முயற்சிகள் சகலதையும் முறியடிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

### திடீர் மரணங்களை...

பிரதான கடமையென சுகாதார அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மருத்துவம் மற்றும் தாதியத்துறை ஆகிய இரு பிரிவுகளிலும் சிறந்த அறிவு மற்றும் புரிதலும் அனுபவமும் மருந்து ஒவ்வாமை தொடர்பில் ஆய்வு செய்யும் நிபுணர்களே இந்த குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அதன்படி, மருந்து ஒவ்வாமையின் காரணமாக உயிரிழந்ததாகக் கூறப்படும் சகல சர்ச்சைக்குரிய மரணங்கள் தொடர்பிலும் ஆய்வுகளை முன்னெடுத்து இந்தக்குழு முழுமையான விபர அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும்.

நாட்டிலுள்ள வைத்தியசாலை கட்டமைப்புகளிலுள்ள நோயாளர்களுக்கு சிறந்த சுகாதார சேவையை பெற்றுக்கொடுப்பதற்கு இந்தக்குழு ஒத்துழைப்பாக இருக்குமென்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### எம்.பிக்களின் சிறப்புரிமைகள்...

சமர்ப்பிக்க பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (17) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

உத்தேச பாராளுமன்ற விசேட குழுவை நியமிப்பதற்கான பிரேரணை நாளை முன்வைக்கப்படவுள்ள தாகவும் அது தொடர்பான விவாதத்தை வேறொரு நாளில் நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். அதுமட்டுமின்றி, கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய இன்று (18) ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற அமர்வின் பின்னர் வாரத்தின் பாராளுமன்ற அலுவல்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் ஆடி கொண்டாட்டம்

மன்னார் நகர் நிருபர்

''ஆடிப் பிறப்பில் தமிழர் நாம் கூடிக் கொண்டாடிக் குதூகலிப்போம்'' எனும் தொனிப்பொருளில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், மன்னார் மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்த ஆடிப்பிறப்புக் கொண்டாட்ட நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (17) காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் உருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும், ரன் விம வீடமைப்புத் திட்டத்தில் தெரிவு



செய்யப்பட்ட பயனாளிகள் 04 பேருக்கு முதல் கட்டமாக தலா 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.

இதேவேளை, மன்னார் மாவட்ட செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

# யானைகளின் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்கக்கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

காட்டு யானைகளின் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்கக்கோரி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி, கண்டவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பு பகுதிக்குள் தொடர்ச்சியாக காட்டு யானைகள் நுழைந்து அட்டகாசம் செய்துவருகின்றன.

இது தொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்தபோதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்தே குறித்த போராட்டம்



முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## மூன்று பிள்ளைகளின் தாய் ஆயுதத்தால் தாக்கி படுகொலை

மொனராகலை, வெள்ளச்சிகடை பகுதியில் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப் பட்டுள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (17) காலை இடம் பெற்றுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக கணவன் மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் அதே பகுதியில் வசிக்கும் 45 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாய் என பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் மொனராகலை பொலிஸார் உயிரிழந்த பெண்ணின் கணவரைக் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பில் முதலீட்டு குழுக் கூட்டம்

அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வெளிவிவகார அலுவலக இருதரப்பு ஆலோசனைகள், மூலோபாய கடல்சார் உரையாடல், வர்த்தக மற்றும் முதலீட்டுக் குழு கூட்டம் கொழும்பில் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

இக்கூட்டம் கடந்த 12ஆம் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டங்களுக்கு அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார மற்றும் வர்த்தகத் திணைக்களத்தின் முதலாவது உதவிச் செயலாளர் கேரி கோவன், மேலதிக செயலாளர் (இருதரப்பு கிழக்கு) யசோஜா குணசேகர, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் (பொருளாதார விவகாரங்கள்) ஷானிகா திசாநாயக்க மற்றும் வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி. அத்தபத்து ஆகியோர் தலைமை தாங்கினர்.

கலந்துரையாடலின்போது பாதுகாப்பு, விவசாயம், இணையப் பாதுகாப்பு மற்றும் கல்வித் துறைகளில் நிறுவன ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான புதிய வழிகள் கண்டறியப்பட்டன. இந்து சமுத்திர விளிம்பு சங்கம் உட்பட பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக இரு தரப்பும் இணைந்து செயற்படுவதற்கு ஒப்புக்கொண்டன. வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

# பொலிஸ் வேடத்தில் வீட்டினுள் நுழைந்து கொள்ளை: வீட்டார் மீதும் தாக்குதல்

பதுளை - ஹல்தோட்டை பிரதேசத்தில் வீடொன்றுக்குள் புகுந்து மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவம் தொடர்பில் அங்குருவாதொட்ட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வாள் மற்றும் தடிகளை ஏந்தியவாறு ஹல்தோட்டை பிரதேச வர்த்தகரொருவரின் வீடொன்றுக்குள் நேற்றுமுன்தினம் (16) இரவு புகுந்த 07 பேர் கொண்ட கும்பல் அங்கிருந்தவர்களை தாக்கி தங்கம் உள்ளிட்ட பொருட்களை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் மேற்குறித்த வீட்டுக்குச் சென்ற கொள்ளைக் கும்பல், பொலிஸார் என அறிமுகம் செய்து கதவை திறக்க செய்துள்ளனர். அதன்பின் தடிகளோடும் கூரிய ஆயுதங்களோடும் உள்ளே நுழைந்து, வீட்டு உரிமையாளர் மற்றும் அவரது 02 மகன்மார் மீது சரமாரியாக தாக்குதலை மேற்கொண்டு விட்டு வீட்டின் அறைகளில் இருந்த தங்கம் மற்றும் பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக



கூறப்படுகிறது.

குறித்த கொள்ளையர்கள் பொலிஸ் சீருடைக்கு நிகரான சீருடை அணிந்து, வெள்ளை நிற தலைக்கவசம் மற்றும் கறுப்புநிற முகமூடிகளை அணிந்து மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அங்குருவாதொட்ட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலைத் தரவுகளை கல்வியமைச்சு சரியாகப் பராமரிக்க வேண்டியது அவசியம்

## கோபா குழுவின் தலைவர் சுட்டிக்காட்டு





ஆசிரியர் பற்றாக்குறையுள்ள பாடசாலைகள், ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ள பாடசாலைகள், மாணவர்களின் தகவல்கள் மற்றும் ஆசிரியர் வெற்றிடங்கள் பற்றிய தரவுகளை கல்வியமைச்சு சரியாகப் பராமரிக்க வேண்டும் என கோபா குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் கல்வித்துறையில் அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய தரவு அமைப்பை பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து அரசாங்கக் கணக்குகள் பற்றிய (கோபா) குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண தலைமையில் கடந்த 07ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடியபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்த நாட்டில் கல்வி தொடர்பான அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிய தரவு அமைப்பை பராமரிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் கோபா குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் 20ஆம் திகதி கல்வியமைச்சு கோபா குழுவுக்கு அழைக்கப்பட்டபோது, இலங்கையின் கல்வித் துறை தொடர்பான தரவுகளைப் பராமரிக்கும் கல்வி முகாமைத்துவ தரவுக் கட்டமைப்பு (NEMIS) பற்றி கலந்துரையாடப்பட்டது. இந்தத் தரவுக் கட்டமைப்பில் போதுமான புதுப்பிக்கப்பட்ட தரவுகள் இல்லை என்பது இதன்போது தெரியவந்தது. இதன் காரணமாக கல்வித்துறையில் உள்ள சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் இந்தத் தரவுக் கட்டமைப்புடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் தொடர்புபடுத்தி இது தொடர்பில் கலந்துரையாட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய கடந்த 07ஆம் திகதி கோபா குழு கூடி இது தொடர்பான அனைத்துத் தரப்பினரையும் தொடர்புபடுத்தி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

ஆசிரியர்கள் பற்றாக்குறையுள்ள பாடசாலைகள், ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ள பாடசாலைகள், மாணவர்கள் பற்றிய தகவல்கள் மற்றும் ஆசிரியர் வெற்றிடங்கள் பற்றிய தரவுகள் போன்றவற்றை கல்வியமைச்சு சரியாகப் பராமரிக்க வேண்டும் என கோபா குழுவின் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார். இதில், பல மாகாணங்களின் கல்வி நிர்வாக அதிகாரிகளும் Zoom தொழில்நுட்பம் மூலம் இணைந்துகொண்டனர். அதற்கமைய, இந்த அதிகாரிகள் அனைவரிடமும் தற்போதுள்ள தரவுக் கட்டமைப்பு தரவுகளை பதிவுசெய்தல் மற்றும் அதில் காணப்படும் சிரமங்கள் குறித்து வினவப்பட்டது.

அத்துடன், சப்ரகமுவ மாகாணத்தின் ஒரு சில அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு மாகாணத்தில் செயற்படுத்தப்படும் தரவு அமைப்பு மற்றும் அந்த அதிகாரிகள் இங்கு அழைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்தத் தரவு அமைப்பில் சாதகமான அம்சங்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய கோபா குழு, இதனை விருத்தி செய்து தேசிய அளவில் பராமரிக்க முடியுமா என்பதைப் பரிசீலித்து அது தொடர்பில் உதவுமாறு இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்துக்கு ஆலோசனை வழங்கியது.

அதற்கமைய, ஒரு வாரத்துக்குள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் அதிகாரிகள் மற்றும் கல்வியமைச்சின் அதிகாரிகள் சந்தித்துக் கலந்துரையாடி, தரவு அமைப்பிலுள்ள குறைபாடுகளைச் சீர்செய்யும் முறை தொடர்பில் அறிக்கை ஒன்றை வழங்குமாறு கோபா குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, பிரசன்ன ரணவீர, கலாநிதி சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான விமலவீர திசாநாயக்க, அசோக அபேசிங்க, வீரசுமன வீரசிங்க, கலாநிதி மேஜர் பிரதீப் உந்துகொட மற்றும் மஞ்சுலா திசாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப் ஜனாதிபதி ரணிலுடன் கலந்துரையாடல்

## இருநாடுகளினதும் பொருளாதார நிலைமை குறித்தும் ஆராய்வு

அஷ்ரப் ஏ. சமட்

பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப் இலங்கை ஜனாதிபதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இரு நாடுகளினதும் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) ஒப்பந்தம் தொடர்பாக பாகிஸ்தானுக்கு ஆதரவளித்த இலங்கை ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார்.

பிராந்திய அமைதி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதில் இலங்கையின் பங்களிப்புக்கு மதிப்பளிப்பதாகவும் பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மிக விரைவில் வெளிவரும் என்றும் அவர்



நம்பிக்கை தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர்கள் மட்ட உடன்படிக்கையை எட்டியதற்காக பிரதமர் ஷெபாஸ் ஷெரீபுக்கு இலங்கை ஜனாதிபதி வாழ்த்து தெரிவித்தார்.

பாகிஸ்தானின் கடினமான பொருளாதார சூழ்நிலையில் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பின் முயற்சிகளை இலங்கை ஜனாதிபதி பாராட்டினார்.

**ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளராக மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.எம். அம்ஜாத் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச கையளித்தார். இந்நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்துமபண்டாரவும் கலந்து கொண்டார்.**



**படப்பிடிப்பு:** *பேருவளை நிருபர்*

## அநுராதபுரம் ஜயஸ்ரீ மஹா போதியில் வழிபட்ட விமானப்படை தளபதி





புதிதாக பதவியேற்றதன் பின்னர் பாரம்பரியத்துக்கமைவாக இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ அநுராதபுர ஜயஸ்ரீ மஹா போதியில் மதவழிபாடுகளில் கடந்த 15ஆம் திகதி ஈடுபட்டார்.

இதன்போது ருவன்வெலிசாய அடமஸ்தானாதிபதி பிரதான சங்கநாயக்க வண.பல்லேகம ஹேமரத்தன தேரரை சந்தித்து ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் விமானப்படையின் சேவா வனிதா பிரிவின் தலைவி இனோகா ராஜபக்ஷ, தளபதியின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் விமானப்படையின் ஏனைய பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.


# வெற்றி நிச்சயம்



**“உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்” நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/ Srimath Suwamiji/**


# தினசரி பலாபலன்கள்

## சோபகிருது வருடம் ஆடி மாதம் 2ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

- **மேஷம்:** எதிர்ப்பாராத சில விபத்துகளில் சிக்கலாம். வீடு, வாகனம் வாங்குவதும் விற்பதும் இன்றைய நாளில் கூடாது.
- **ரிஷபம்:** நெருங்கிய நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். மன உறுதியுடன் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.
- **மிதுனம்:** குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்தி ஏற்படும். உங்களால் குடும்பத்தில் குழப்ப நிலைகள் உருவாகலாம்.
- **கடகம்:** குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும்.நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.
- **சிம்மம்:** தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.
- **கன்னி:** தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களை பெறுவீர்கள். எதிர்ப்பாராத தன வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.
- **துலாம்:** தொழில் மூலமாக பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்து சேரும்.
- **விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக்குமிடையிலான உறவு பாதிக்கப்படும்.
- **தனுசு:** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும். வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.
- **மகரம்:** கூட்டுத் தொழில், வியாபாரத்தில் நல்ல இலாபம் உண்டு. நீண்ட நாள் உங்கள் மனக் குறை தீரும்.
- **கும்பம்:** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நோய், கடன், எதிரி இவை எதுவுமே இன்று உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.
- **மீனம்:** மனதை ஒரு நிலையில் வைத்துக் கொள்ளுங்கள். புத்திரர்களால் தொல்லையும் கவலையும் தோன்றும்.

**திதி:** பிரதமை பி.இ.2.10 வரை பின் துவிதியை (வளர்)
**நட்சத்திரம்:** பூசம் முழுவதும்
**யோகம்:** சித்த யோகம்; முழுவதும்
**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப. 7.59– 8.59 மணிவரை
**ராகுகாலம்:** 2.59 – 4.29 மணிவரை
**எமகண்டம் :** 8.59–10.29 மணிவரை
**குளிகை:** 11.59– 1.29 மணிவரை
**சந்திராஷ்டமம்:** தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிஷ்டம்:** புனர்பூசம், விசாகம், பூரட்டாதி(பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** ஆடிச் செவ்வாய்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜூலை 18ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# இலங்கை எப்போது சிங்கப்பூராகும்?

ஊழலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சிங்கப்பூர் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.ஈஸ்வரன் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து, விசாரணை முடியும்வரை அவரை அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் விடுவிக்க அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் மற்றும் கோடீஸ்வர தொழிலதிபர் ஓங் பெங் மீதும் இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. ஊழலில் ஈடுபடுவதை தடுப்பதற்காக சிங்கப்பூரில் அமைச்சர் ஒருவருக்கு அதிக சம்பளம் வழங்கப்படுவதாகவும் அப்படியானால் அமைச்சர் ஒருவர் ஊழலில் ஈடுபடுவதை மன்னிக்கவே முடியாது என்றும் ஊழல் புலனாய்வுப் பணியகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டதன் பின்னர், விசாரணைகள் நிறைவடையும் வரை அமைச்சரை பிணையில் விடுவிக்க ஊழல் புலனாய்வுப் பணியகம் ஏற்பாடு செய்துள்ளதுடன் அவரது கடவுச்சீட்டை பணியகம் கையகப்படுத்தியுள்ளது.

ஊழல் தொடர்பான விசாரணைக்கு போக்குவரத்து அமைச்சர் ஆதரவு அளித்ததாகவும் அதன் அடிப்படையில் கைது செய்யப்பட்டதாகவும் சிங்கப்பூர் ஊழல் புலனாய்வுப் பிரிவு ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளது.

கடந்த 05ஆம் திகதி ஊழல் விசாரணைப் பணியகம் அந்நாட்டு பிரதமர் லீ சியாங் லாங்கிற்கு, ஊழல் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் ஈஸ்வரனிடம் விசாரணை நடத்த விரும்புவதாக அறிவித்தது.

கோரிக்கையை அனுமதித்த பிரதமர், 06ஆம் திகதி போக்குவரத்து அமைச்சரிடம் விசாரணை நடத்த ஊழல் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இது குறித்து பிரதமர் லீ சியாங் லாங் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 05ஆம் திகதி ஊழல் புலனாய்வுப் பிரிவினரால் போக்குவரத்து அமைச்சரிடம் விசாரணை நடத்தக்கோரி விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அனுமதி அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், விசாரணை முடியும் வரை கட்டாய விடுப்பில் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் மூத்த இராஜாங்க அமைச்சர் சீ ஹாங் டாட், போக்குவரத்துத் துறையின் தற்காலிக அமைச்சராக செயல்படுவார் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

விசாரணை முடியும்வரை அவரை அனைத்து பதவிகள் மற்றும் பொறுப்புகளில் இருந்து விடுவிக்குமாறு அரசுக்கு பிரதமர் அறிவுறுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் மதிப்பீட்டின்படி, ஊழல் வழக்குகள் குறைவாக உள்ள நாடுகளில் சிங்கப்பூர் 05ஆவது இடத்தில் இருக்கிறது. சிங்கப்பூரின் பெருந்தலைவர் லீ குவான் யூ ஒருமுறை கூறியது போல், ''ஆட்சியில் இருப்பவர்கள் நேர்மைக்கு முன்மாதிரியாக இல்லாவிட்டால், ஊழலுக்கு எதிரான போராட்டம் சாத்தியமற்றது'' என்றார் அவர்.

பின்தங்கிய ஆசிய நாடாக இருந்த சிங்கப்பூர் கடந்த 40ஆண்டுகளில் அபிவிருத்தியடைந்த நாடாக உருவெடுத்துள்ளது. ஊழலுக்கு எதிரான போராட்டமே அந்த வெற்றிக்கான திறவுகோல். சிங்கப்பூர் நாட்டையே மாற்றியமைத்தவர் லீ குவான் யூ.

''நீங்கள் ஊழலைத் தோற்கடிக்க விரும்பினால், உங்கள் நண்பர்களையும் உறவினர்களையும் சிறைக்கு அனுப்பத் தயாராகுங்கள்'' இனிமேல், சட்டம் நாட்டை ஆளுகிறது. அதற்கு முன் அனைவரும் சமம் - நடுத்தர அதிகாரியாக இருந்தாலும் சரி, பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி புதிய அரசாங்கத்தின்படி, முறைகேடுகளைச் சமாளிக்க, பழக்கப்படுத்தப்பட்ட திட்டத்தை முற்றிலுமாக அகற்றுவது அவசியம் என்ற அவரின் கருத்தே அந்நாடு இந்த நிலைமையில் இருப்பதற்கான காரணம்.

ஊழலைத் திறம்பட எதிர்த்துப் போராடுவதற்கான மிக முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்று அதிகாரிகளின் சம்பளத்தை அதிகரிப்பதாகும். ''தங்கள் கண்ணியமான மற்றும் நேர்மையான பணியால் அவர்கள் அதற்கு தகுதியானவர்கள்'' என்று லீ குவான் யூ அதனை நியாயப்படுத்தினார். ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒரு அதிகாரியின் வேலை, ஓய்வூதியம் மற்றும் அனைத்து சலுகைகளும் பறிக்கப்பட்டன. அதே நேரத்தில், ஊழல் நடைமுறைகளுக்கு குற்றவியல் தண்டனைகள் அங்கு கடுமையாக்கப்பட்டன.

சிங்கப்பூரில் தற்போது உள்ளது கடுமையான சர்வாதிகார அரசு. ஊழல் இல்லாமை, பொருளாதார சுதந்திரம் மற்றும் வளர்ச்சி நிலை ஆகியவற்றுக்காக உலக தரவரிசையில் முன்னணி இடத்தைப் பிடித்துள்ளது. நிச்சயமாக 04 மில்லியன் மக்கள்தொகை கொண்ட ஒரு சிறிய தீவில் இப்படி நடக்குமாயின் இதர நாடுகள் இவற்றிலிருந்து பாடம் கற்கவேண்டியது அவசியம்.

தலைவர்களின் அரசியல் கொள்கை மற்றும் திறமையான ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் காரணமாக சிங்கப்பூர் ஊழலை முறியடித்து, பொருளாதார வளர்ச்சியில் உலகத் தலைவராக மாற முடிந்தது. முதலாவதாக, ஊழல் செயல்களைச் செய்வதற்கான வாய்ப்புகள் குறைக்கப்பட்டன. 1960ஆம் ஆண்டில், ஊழல் தடுப்பு மூலோபாயம் ஊழல் தடுப்பு மற்றும் ஊழல் விசாரணைப் பணியகத்தின் அதிகாரமளித்தல் பற்றிய சட்டத்தில் பொறிக்கப்பட்டது. ஆனால், இங்கோ ஊழல் தடுப்புச்சட்டமொன்றை கொண்டுவரவே பெரும் இழுபறி நிலை இருக்கும் நிலையில் சிங்கப்பூரின் நிலைக்கு நாம் செல்வது எப்போது?

## இன்றைய நாளில்...

- 1916 – யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பெரும் சூறாவளியில் பலர் உயிரிழந்தனர். வீடுகள் மற்றும் பல தொலைத்தொடர்பு சாதனங்கள் சேதமடைந்தன.
- 1925 – ஹிட்லரின் புகழ்பெற்ற மெயின் கேம்ப் வெளியிடப்பட்டது.
- 1942 – செருமனி மெசேர்ஸ்கிமிட் எம்.இ 262 வானூர்தியை சோதனைக்காகப் பறக்கவிட்டது.
- 1966 – மனித விண்வெளிப்பறப்பு: நாசாவின் ஜெமினி 10 விண்கலம் ஏவப்பட்டது.
- 1968 – இன்டெல் நிறுவனம் மவுண்டன் வியூ, கலிபோர்னியாவில் நிறுவப்பட்டது.
- 1996 – ஓயாத அலைகள் ஒன்று: முல்லைத்தீவு இலங்கைப் படைமுகாம் விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டது. 1200 படையினர் கொல்லப்பட்டனர்.

# தமிழின் முதல் புதின ஆசிரியர் வள்ளலாரா?

தமிழின் உரைநடை இலக்கியம் பொ.ஆ. (கி.பி.) எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தொடங்கியிருந்தபோதும், உரைநடை சார்ந்த படைப்பிலக்கியமோ கட்டுரை இலக்கியமோ படைக்கப்பட்டதில்லை.




இதனை மிக நேர்த்தியாகக் கையாண்டு புதின இலக்கியத்தை முதன்முதலில் படைத்தவர் வள்ளலார் எனலாம். இதனைப் பலரும் கவனிக்கத் தவறியதன் விளைவே, 1879இல் மாயூரம் வேதநாயகம் வெளியிட்ட 'பிரதாப முதலியார் சரித்திரம்' தான் தமிழின் முதல் புதினம் ஆனதற்குக் காரணம். ஆனால், வள்ளலார் எழுதிய 'மநுமுறை கண்ட வாசகம்' தான் தமிழின் முதல் புதின முயற்சி. எடுத்துக்கொண்ட கதையையும் அதில் வரும் கதாபாத்திரச் சித்திரிப்பையும் வைத்து இதை உணர முடியும்.

இறை வணக்கப் பாடலை எழுதிவிட்டு, கதையை இப்படித் தொடங்கியுள்ளார்: 'கடல் சூழ்ந்த உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலுஞ் சிறப்புடையதாய் காவிரி என்னுந் தெய்வத் தன்மை யுள்ள நதியினால் எந்தக் காலத்திலுங் குறைவு படாத நீர்வளப்ப முடையதாய் வாழைச் சோலை பலாச் சோலை மாஞ்சோலை தென்னஞ்சோலை கமுகஞ் சோலை கருப்ப சோலை முதலாகிய பயனுள்ள சோலைகள் அணியணியாக ஒன்றையொன்று சூழ்ந்தோங்க அசோகு குருக்கத்தி சண்பகம் பாதிரி முதலான விருட்சங்களால் நெருங்கி வண்டுகள் பாடுகின்ற மலர்ச் சோலைகளும் தாமரைத் தடாகங்களும் நீர் நிறைந்து அல்லி நீலம் முதலான புட்பங்களும் மலர்கின்ற ஓடைகளும் பொய்கைகளும் ஏரிகளும் குளங்களும் பலவிடங்களிலு முள்ளதாய், செந்நெல் முதலாகிய பயிர்கள் மாறாது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய வயல்கள் நெருங்கி யுள்ளதாய் சிதம்பரம் பஞ்சநதம் மத்தியார்ச்சுனம் சம்புகேச்சுரம் முதலான திவ்விய கேத்திரங்கள் இடையிலுள்ளதாய்... (பக். 79)'.

அறுபது வயதுவரை குழந்தைப்பேறு இல்லாமல் வாழ்ந்த மனுநீதிச் சோழன் பெரும் தவத்துக்குப் பிறகு பிறக்கும் தமது மகனைப் பசுவின் கன்றுக்காய் கொல்கிறான் என்றால், எத்தகைய உயிர் இரக்கம் கொண்டவனாக இருந்திருப்பான். பசுவின் கன்று தேர்க்காலில் சிக்கி இறந்த செய்தியறிந்து துடிதுடித்துப் போகிறான். சோழனின் புலம்பலும் அதனைத் தொடர்ந்து நடக்கும் கதைப்போக்கும் பாத்திரங்கள் பேசும் உரையாடலும் வாசிப்போரை ஒன்றவைத்துவிடுகின்றன. தேர்க்காலிலே கன்று அகப்பட்டதை நாவலாசிரியரின் மொழியில் காண்போம்: இந்தப் பிரகாரம் அவ்வவ் வீதியிலுள்ள இஸ்திரீ ஜனங்களும் புருஷ ஜனங்களும் பார்த்துப் பார்த்துப் பலவிதமாகப் புகழ்ந்து நெருங்க வீதி விடங்கன் தேரிலேறிச் செல்லும்போது, ஒரு வீதியில் தேரிலே கட்டிய குதிரைகள் தேர்ப்பாகன் வசத்தைக் கடந்து தெய்வத்தின் வசமாகி, அதிவேகமாக அத்தேரை இழுத்துக்கொண்டு சென்றன (பக்.97)'.

இறுதியில், மிக உறுதியாக மந்திரியை அழைத்துத் தன் மகனைக் கன்று இறந்த இடத்திலேயே படுக்கவைத்துத் தேரை ஏற்றிக் கொல்லுமாறு தீர்ப்பளிக்கின்றான். இதனைக் கூறும் பகுதிப் பின்வருமாறு அமைகிறது: இந்தப் பசுவின் கன்றைக் கொன்ற பழிக்கு ஈடாக என் புத்திரனைக் கொலை செய்வதே நிச்சயமாகிய தீர்ப்பு என்று சொல்லிவிட்டு, பின்பு மந்திரிகளுக்குள் கலாவல்லபன் என்கிற மந்திரியைப் பார்த்து, மந்திரி என் புத்திரனையழைத்துப்போய் அந்த கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற் கிடத்தி, நீ தேரிலேறிக் கொண்டு அவனுடம்பின் மேல் தேர்ச் சக்கரம் ஏறும்படி செய்து கொலை செய்து வருவாய்'' என்று கட்டளையிட்டார்.

மனுநீதிச் சோழனின் கதையைச் சிறுவயதில் கேட்டபொழுதுகூட இந்தக் கலாவல்லபன் என்ற கதாபாத்திரத்தைப் பற்றிக் கேள்வி பட்டதில்லை. இந்தக் கதாபாத்திரத்தின் வார்ப்பின் மூலம் அச்சூழலின் சோகத்தை மேலும் அதிகரித்துவிடுகிறார் வள்ளலார். பின்பு இந்த எதிர்பாராத சம்பவத்துக்காகவும் பெரும் துன்பத்துடன் வருந்தும் மனுநீதிச் சோழன் இனி இப்படியொரு சம்பவம் நடந்துவிடக் கூடாது, இதற்கு நான் பொறுப்பாகிவிட்டேனே என்று பற்பலவாறு அவலச்சுவை சொட்டச் சொட்டப் புலம்பி அழுகிறார். அந்தப் பகுதியை மிகத் துயரம் மிக்கதாகவே பதிவுசெய்திருக்கிறார்.

எல்லா உயிரிலும் இறைவன் குடியிருக்கிறான். இவ்வுண்மையை நிலைநாட்ட இப்புதினத்தைப் தெரிவுசெய்து கொண்டு இந்தக் கதையைப் படைத்திருக்கிறார். இது எழுதப்பட்ட பொ.ஆ. 1854இல் தமிழில் புதின இலக்கியம் தோன்ற வில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். வள்ளலார், அக்காலச் சூழலில் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகி வாழ்ந்தவர்.

அத்துடன் அவர்தம் படைப்புகள் அருட்பாவா? மருட்பாவா? என்ற விவாதம் ஒருபுறம் மிகக் காத்திரமாக நடைபெற்றதையும் காண்கிறோம். இப்படிப்பட்ட நிலையிலிருந்து தமிழ்ச் சூழலில் உரைநடைப் பணியை அழுத்தமாக உருவாக்கி, தம் பங்குக்குச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

தமிழர்கள் எவ்வுயிரையும் தம்முயிர் போன்று பாவித்து வாழ்ந்தவர்கள். இந்த மரபின் பின்னணியில் வந்த வள்ளலார் எல்லா உயிர்களிலும் இறைவனின் தரிசனத்தைக் கண்ட வள்ளலார், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார், பெரிய புராணத்திலும் குறிக்கப்பட்ட இக்கதையைத் தனியாக எடுத்து எழுதியதன் வாயிலாகப் பல்வேறு செய்திகளை உணர்த்தி நிற்பதோடு, தமிழின் முதல் உரைநடைப் பாணிக் கதையையும் எழுதியிருக்கிறார்.

**பேராசிரியர் - ம.பிரபாகரன்**

**நன்றி - தமிழ் இந்து**

# வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள்மூலம் சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்க

## சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணிப்பு





வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்கள் ஊடாக சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஆகியவற்றுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதற்கு வெளிவிவகார அமைச்சு தனது ஆதரவை வழங்க வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் கூடிய சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் இது பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

அதிக வருமானம் பெறும் நாடுகளில் இருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது மற்றும் சுற்றுலாத் துறையின் வருமானத்தை அதிகரிப்பதன் முக்கியத்துவம் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. ஸ்பெயினின் மட்ரிட் நகரில் இலங்கைத் தூதரகத்தை திறப்பதன் மூலம் சுற்றுலாத்துறைக்குப் பாரிய அனுகூலத்தைப் பெற்றுக்கொடுக்கும் சாத்தியம் காணப்படுவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன சுட்டிக்காட்டியதோடு, இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் அறிக்கையை கோருவதற்கு குழு தீர்மானித்தது.

ருமேனியாவில் இலங்கை தூதரகத்தை திறப்பது தொடர்பான பணிகளை விரைவுபடுத்துவதற்கான பரிந்துரைகளை குழு, வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளிடம் முன்வைத்தது. இலங்கைக்கும் ருமேனியாவுக்கும் இடையிலான உறவுகளை விரிவுபடுத்துவதும் ருமேனியாவில் பணிபுரியும் இலங்கை சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் இதன் நோக்கமாகும்.

மேலும், இந்தக் குழுவில் முன்னர் வழங்கப்பட்ட பரிந்துரையின்படி, வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் புதிய கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்து, தமது கடவுச்சீட்டைப் புதுப்பிக்கும்போது, ஜூன் 1ஆம் திகதி முதல் ஒன்லைனில் விண்ணப்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை குடிவரவு குடியகல்வு திணைக்களம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைக்கு குழு நன்றி தெரிவித்தது.

இலங்கைக்கு வருகை தரும் ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் பணம் செலுத்துவதற்கு வசதியாக இலங்கை மத்திய வங்கியினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை குழுவில் கலந்துரையாடப்பட்டது. ரஷ்ய சுற்றுலாப் பயணிகளுக்காக மக்கள் வங்கியால் நடைமுறைப்படுத்தப்படும் முறைமை மற்றும் யூனியன் பே முறைமை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் குழு வினவியதுடன், உண்மையான சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த இரண்டு முறைகளையும் பின்பற்றலாம் என்பதை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அதற்கேற்ப செயல்பட தேவையான நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு குழு பரிந்துரை செய்தது.

மேலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு ஏனைய நாடுகள் பயன்படுத்தும் நவீன கட்டண முறைகள் தொடர்பில் அறிக்கை ஒன்றை தயாரித்து குழுவிடம் சமர்ப்பிக்குமாறு இலங்கை மத்திய வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளுக்கு குழு பணிப்புரை விடுத்தது.

மேலும், 2030ஆம் ஆண்டுக்குள் சுமார் 05 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடி அவ்வாறுவரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு பொருத்தமான பொறிமுறையைத் தயாரிக்குமாறு குழு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியது.

இக்கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நிரோஷன் பெரேரா, அகில எல்லாவல, கோகிலா குணவர்தன, யதாமினி குணவர்தன மற்றும் சட்டத்தரணி மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி குழுவின் தலைவருடைய அனுமதியுடன் இதில் இணைந்துகொண்டார்.

வெளிவிவகார அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் ஆகியவற்றின் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

## நக்கல் நமசிவாயம்

பதவியேற்ற ஒரு வருட நிறைவு விழாவை கொண்டாட வேணாம் என்று ரணில் சொல்லியிருக்கிறாராம்... குறைந்தபட்சம் கோட்டா கோ கம போராட்டத்துக்கு நன்றி சொல்லும் நிகழ்ச்சிகளையாவது செய்திருக்கலாம்...



# சிறந்த வினைத்திறனை வெளிப்படுத்திய அரசாங்க நிறுவனங்களுக்கு விருதுகள்

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைக்கமைய 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் உயர்ந்த வினைத்திறன் மட்டத்தை அடைந்த 65 நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் பாராளுமன்றத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில், பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

அரச, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பொதுக் கணக்குகளைப் பராமரிக்கும் முறைமை, நிதிக் கட்டுப்பாடு மற்றும் செயற்றிறன் என்பன பாராளுமன்ற தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் செயற்படுத்தப்படும் கணனிமயப்படுத்தப்பட்ட முறையில் வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படுவதுடன், அதற்கமைய, கணக்காய்வாளர் நாயகத்தினால் பகுப்பாய்வு மற்றும் விசாரணை செய்து மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுக்கமைய சிறந்த வினைத்திறனை வெளிப்படுத்திய அரச நிறுவனங்களுக்கு இவ்வாறு விருதுகள் வழங்கப்படுகின்றன.

அதற்கமைய, 833 அரச நிறுவனங்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நிறுவனங்களுக்கு தங்க விருதுகளும் 30 நிறுவனங்களுக்கு வெள்ளி விருதுகளும் 2020 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நிறுவங்களுக்கு தங்க விருதுகளும் 30 நிறுவனங்களுக்கு வெள்ளி விருதுகளும் வழங்கப்படவுள்ளதாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

அரசாங்க அமைச்சுகள், அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்கத்தின் விசேட செலவின அலகுகள், மாவட்ட செயலகங்கள், மாகாண சபை நிதியங்கள், மாகாண சபைகளின் அமைச்சு திணைக்களம் சார் விசேட செலவின அலகுகள், மாகாண சபைகளின் நியதிச்சட்ட நிறுவனங்கள், மாநகரசபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் போன்ற பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

எட்டாவது பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் எண்ணக்கருவுக்கமைய அரச நிறுவனங்களின் நிதி மற்றும் செயற்றிறனை முறைமைப்படுத்தும் நோக்கில் அரச, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களை மதிப்பீடு செய்யும் கணனிமயப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் 2015 நிதியாண்டை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாண சபைகளின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட சுமார் 1,000 அரச நிறுவனங்கள் Zoom தொழில்நுட்பத்தினூடாக இணைந்துகொள்ளவுள்ளன.

## சிவசிதம்பரம் நூற்றாண்டு விழா

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவரும் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் பிறந்த நூற்றாண்டு நினைவு விழா எதிர்வரும் வியாழக்கிழமை (20) மாலை 3 மணிக்கு வடமராட்சி, கரவெட்டி சம்பந்தர் கடையடி மகேசன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர் கு. மிகுந்தன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் வீ.ரி. தமிழ்மாறன், யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, தினக்குரல் முன்னாள் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம், சிவசிதம்பரத்தின் மகள் நிராஞ்சலி தேவராஜ் ஆகியோர் உரையாற்றுவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி விழாவில் கௌரவிக்கப்படுவார்.

அமரர் சிவசிதம்பரத்தின் அரசியல் வாழ்வு ஆவண நூலொன்றும் இதன்போது வெளியிடப்படும். கலைநிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பெரும்போக விவசாயிகளுக்கு இரசாயன உரம் வழங்கப்படும்

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



பெரும்போக விவசாயிகளுக்கு இரசாயன உரம் இலவசமாக வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 2023/24 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இரசாயன உரம் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினேன். இத்திட்டத்துக்கு அவரிடமிருந்து நல்ல பதில் கிடைத்துள்ளது.

இந்த ஆண்டு, மூன்று வகையான பயிர்ச் செய்கைகளுக்கு இலவசமாக டி.எஸ்.பி. வழங்க அரசு நடவடிக்கை எடுத்தது. கடந்த பெரும் போகத்தில் நெற்செய்கையில் ஈடுபட்ட அனைவருக்கும் இந்த ஆண்டும் நெற்செய்கை மேற்கொண்டாலும் இல்லாவிட்டாலும் இலவசமாக TSP வழங்கப்படும்.

விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்கத்தில் அரசு இந்தச் சலுகைகளை வழங்குகிறது.

கடந்த பெரும் போகத்தில் உரம் கொள்வனவு செய்வதற்குத் தேவையான பணத்தை அரசாங்கம் விவசாயிகளுக்கு வழங்கியது.

இம்முறை பெரும்போக விவசாயிகளுக்கு வவுச்சர்களுக்குப் பதிலாக விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பிலிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி, விவசாயிகள் தனியார் அல்லது அரச உர நிறுவனங்களிடமிருந்து உரங்களைக் கொள்முதல் செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

# யாழ். பாடசாலைக்கு கிறிஸ்தவ அதிபர் நியமனம்: எதிர்த்து மக்கள் போராட்டம்





யாழ்ப்பாணம், வேலணை மத்திய கல்லூரிக்கு புதிதாக கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த அதிபர் நியமிக்கப்படவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முற்பகல் 11 மணியளவில் பாடசாலைக்கு முன்பாக போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றிருந்த நிலையில், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலை வளாகத்தினுள் காணப்பட்டார். இதன்போது பாடசாலை வாயிற் கதவு மூடப்பட்டிருந்தது.

கடந்த ஜூன் 9 ஆம் திகதி ஏற்கனவேயிருந்த அதிபர் ஓய்வுபெற்ற நிலையில், புதிய அதிபர் வெற்றிடத்துக்கு பத்திரிகையில் விண்ணப்பம் கோரப்பட்டிருந்த நிலையில் இருவர் குறித்த பதவி நிலைக்கு விண்ணப்பித்திருந்தும் ஒருவர் உரிய தகைமையின்மையால் நிராகரிக்கப்பட்டதுடன் மற்றைய விண்ணப்பதாரிக்கு நேர்முகத் தேர்வு இடம்பெற்று முடிவுகள் அறிவிக்கப்படாத நிலையில் புதிதாக கிறிஸ்தவ அதிபர் நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சமயத்தை பாதுகாக்க தனியார் வகுப்புகளை நிறுத்தும் நடவடிக்கைகளை எடுத்த நிலையில், அதே நிர்வாகக் கட்டமைப்பு மட்டங்களிலுள்ள அதிகாரிகள் மத முரண்பாட்டை ஏற்படுத்தும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது பொருத்தமானதல்ல என போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, பாடசாலைக்கு கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த அதிபரின் நியமனத்தை நிறுத்துமாறு கோரி ஆளுநருக்கு அனுப்பப்படவுள்ள கடிதத்துக்கான கையெழுத்தும் இதன்போது சேகரிக்கப்பட்டது.

# திடீரென காடு தீப்பிடித்ததால் உயர்தர தேயிலைச் செடிகளும் எரிந்து நாசம்



ஆ.ரமேஸ்

ஹைபொரஸ்ட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹைபொரஸ்ட் இலக்கம் 3 தோட்டத்தில் உயர்தர தேயிலைச் செடிகளுடன் இணைந்த இயற்கைத் துண்டுக் காடு தீப்பிடித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (16) இரவு இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கும் ஹைபொரஸ்ட் பொலிஸார் இச்சம்பவத்தில் சுமார் எட்டு ஹெக்டேயர் வரையான தேயிலைச் செடிகளும் எரிந்து நாசமாகியுள்ளன. அதேநேரம், ஹைபொரஸ்ட் இல:03 தோட்ட நிர்வாகத்துக்குச் சொந்தமான எட்டு ஹெக்டேயர் கொண்ட தேயிலை மலையுடன் இணைந்துள்ள பகுதி திடீரென தீ பரவலுக்குள்ளாகியதாகத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் தீப்பரவிய பகுதியில் உள்ள தேயிலை மலையில் உயர்தர தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. அத்துடன், துண்டு காட்டுப் பகுதியுடன் தேயிலை மலையும் காணப்படுவதால் துண்டு காட்டில் ஏற்பட்ட தீ தேயிலை மலைக்கும் பரவியதால் சுமார் பல ஹெக்டேயர்கள் தீயுக்கு இரையாகியுள்ளதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் ஹைபொரஸ்ட் பொலிஸாருக்கும் மாகுடுகலை மற்றும் பிங்கந்தலாவை வன பாதுகாப்புப் பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டு சம்பவ இடத்துக்கு விரைந்த அதிகாரிகளுடன் தோட்ட மக்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதிலும் தீ முழுமையாக அணைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அலவியின் மறைவு வேதனை தருகிறது



## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் அனுதாபம்



குருநாகல் மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமூக சேவையாளருமான ஏ.எச்.எம்.அலவியின் மறைவு தனக்கு மிகவும் வேதனை தருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அலவியின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குருநாகல் மாவட்டத்தின் முதலாவது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினராகி வரலாற்றில் தடம்பதித்த ஏ.எச்.எம்.அலவி, முஸ்லிம்கள் மாத்திரமின்றி சிங்கள மக்களாலும் அதிகம் நேசிக்கப்பட்டார்.

பம்மன்னவை பிறப்பிடமாகக் கொண்ட அவர், மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக பல்வேறு வழிகளில் பாடுபட்டவர். குருநாகல் மாவட்டத்தில் குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்குத் தேவையான பல நல்ல பணிகளை மேற்கொண்டார். அத்துடன், சிங்கள - முஸ்லிம் மக்கள் மத்தியில் நல்லுறவைப் பேணுவதற்கு உறவுப் பாலமாகச் செயற்பட்டார்.

1990 ஆம் ஆண்டு யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் குருநாகல் மாவட்டத்துக்கு சென்றபொழுது, அவர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், மின்சாரம் உள்ளிட்ட இன்னோரன்ன வசதிகளைச் செய்துகொடுத்து அம்மக்களுக்கு உதவியதுடன், இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான வசதி வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

சமூகப்பற்றும் சமூகத்தின் மீது அதிக அக்கறையும் கொண்டு செயற்பட்ட அன்னார், தனது பதவிக் காலத்தில் மக்களுக்கு முடிந்த வரை சேவையாற்றினார். மக்கள் பணியை விரும்பிச் செய்த அவர் எந்நேரமும் சுறுசுறுப்புடன் கடமையாற்றுவார். மனிதநேயம் கொண்ட அன்னார், குருநாகல் மாவட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசியல் முக்கியஸ்தர்களை அடிக்கடி தொடர்புகொண்டு அவற்றை நிவர்த்தி செய்தவர்.

மேலும், குருநாகல் மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியை வளர்த்தெடுப்பதில் ஆர்வங்காட்டியவர்.

நற்பண்பாளரான அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களுக்கு இழப்பைத் தாங்கக் கூடிய மனதைரியத்தையும் பொறுமையையும் வழங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரின் பாவங்களை மன்னித்து, அவரது நற்கருமங்களைப் பொருந்திக்கொண்டு, ஜன்னத்துல் பிர்தௌஸுல் அஃலா எனும் உயர் சுவன பாக்கியத்தை வழங்குவானாக என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குளவிக்கொட்டுக்கு இலக்கான பெண் தொழிலாளி உயிரிழப்பு

ஆ.ரமேஸ்

லிந்துலை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட நாகசேன, பம்பர கலை தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி பெண் தொழிலாளியொருவர் உயிரிழந் துள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த பெண் தொழிலாளி நாகசேன,பம்பரகலை மத்திய பிரிவுத் தோட்டத்தைச் சேர்ந்த முத்துசாமிமாரியாய் (வயது65) எனத் தெரிய வந்துள்ளது. தோட்டத்தில் தேயிலை பறிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோதே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இவர் இலக் காகியுள்ளார்.

இவரை லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதிக்கப்பட்ட நிலையில் இவர் உயிரிழந்ததாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மலேசியா பயணம்





இக்பால் அலி

பதினோராவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மலேசியா கோலாலம்பூரில் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை மலாயா பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இவ் ஆய்வு மாநாட்டில் பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஆர். மகேஸ்வரன், தமிழ்த் துறைத் தலைவர் ஸ்ரீ பிரசாந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆர். மகேஸ்வரன் தமிழ் மொழி வளர்ச்சியில் நவீன நூலகப் பரிமாணம் ஆவணபாதுகாப்பு, ஆவணப்படுத்தல் செல்நெறிகளும் : மின்தகவல், மின்பதிவு, மின்நூலகம், தரவுத்தளங்களின் தாக்கம் பற்றி ஓர் ஆய்வு எனும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையையும் ஸ்ரீ பிரசாந்தன் ஆய்வு மாநாட்டின் சிறப்புரையையும் ஆற்றவுள்ளனர். இவர்கள் இன்று (18)மலேசியா பயணமாகின்றனர்.

# பிள்ளைகளுக்கு பெற்றோர் கட்டுப்பாடுகளை விதிக்காது ஒப்பந்தங்கள் மூலம் கையாளுக!

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் உனைஸ் ஆரிப் வேண்டுகோள்





கண்டி நிருபர்

பெற்றோர் எப்போதும் வளரும் பிள்ளைகளிடத்தில் கட்டுப்பாடுகளை விதிப்பதை விட ஒப்பந்தங்கள் மூலம் அவர்களைக் கையாள்வதே சிறந்த பலனைத் தரும் என மத்திய மாகாண கல்வித் திணைக்கள முஸ்லிம் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உனைஸ் ஆரிப் தெரிவித்தார்.

மடவளை மதீனா மத்திய கல்லூரி மாணவ – மாணவிகளது பெற்றோர்களுக்கான கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை (16) இடம்பெற்றது. மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கம் மற்றும் எவ்.டி.எஸ்.சி. அமைப்பு என்பன இணைந்து இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தன.

அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தலைமுறை மாற்றங்கள் அபரிமிதமாகி நவீன காலத்து இளைய சந்ததிகளிடம் தனிமைப்படுதல் அதிகரிக்கும். இதனால் பல தீய விளைவுகளே ஏற்படும். எனவே, தற்போதைய சிறுவர்களைக் கையாளும் விடயத்தில் பெற்றோர் மிக விழிப்பாகவும் அவதானத்துடனும் நடந்துகொள்ள வேண்டும்.

தலைமுறை மாற்றங்கள் என்பன இயல்பாகவே புதிய தலைமுறையினரிடம் வளர்கிறது.

இதனை யாரும் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. ஆறுமாதக் கைக்குழந்தையிடம் கூட ஒரு கையடக்கத் தொலைபேசியைக் கொடுத்தால் அது நாம் சொல்லாமலே அதைக் காதில்வைக்கும். விரலால் அதனை அழுத்திப் பார்க்கும். இது இயல்பாகவே வரும். இதுபோன்ற பல்வேறு செயற்பாடுகள் காரணமாக புதிய தலைமுறையிடம் ஒரு புதிய சமூகக் கட்டமைப்பும் கலாசாரமும் உருவாகிக் கொண்டு வருகிறது.

உதாரணமாக, கையடக்கத் தொலைபேசி, சமூகவலைத்தளங்களில் ஈடுபாடு, பொதிசெய்யப்பட்ட நவீன உணவை நாடுதல் போன்ற புதியவைகள் ஏற்படும். இவை மட்டுமல்லாது, இன்னும் பல காரணிகளால் புதிய சந்ததியினர் கவரப்பட்டு அவை அபரிமிதமாக மாறிவிடும். அவற்றால் அவர்கள் தனிமைப்படுத்தப்படுவர். இதனை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பல புதிய ஆய்வுகள் மெய்ப்பித்துள்ளன.

பிள்ளைகளைப் பார்த்து 'நீ கையடக்கத் தொலைபேசி பாவிக்காதே' என்று கட்டுப்பாடுகளை விதிப்பதைவிட 'இன்று சமய பாடசாலைக்குச் சென்றால் ஒரு மணி நேரம் கையடக்கத் தொலைபேசியில் விளையாட அனுமதிப்பேன்' என்பது போன்ற ஒப்பந்தங்களைச் செய்து அதனை மீறாத படி பார்த்துக் கொள்ள வேண்டும். மீறினால் ஒப்பந்தப்படியே நடந்துகொள்ளவேண்டும். அதனை மேற்பார்வை செய்ய வேண்டும்.

அவர்களை நல்வழிப்படுத்தும் ஓர் அணுகு முறையாக இதுபோன்ற உபாயங்களைப் பயன்படுத்த வேண்டும். அல்லாத பட்சத்தில் மேலே சொன்ன கோட்பாடுகளின் அடிப்படையில் அவர்கள் மென்மேலும் நெறிபிறழ்வுகளுக்கு ஆளாக வேண்டி ஏற்படும் என்றார்.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.ஏ. ஜலீல் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.


தேசிய லொத்தர் சபை National Lotteries Board — ஞாயிற்றுக்கிழமை 2023.07.16 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5177 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,819,376.00
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 8 7 1 2 1 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3419 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,412,095.60
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 49 67 74 80

லக்கி 7 Lucky லக்ன — சீட்டிழுப்பு இலக்கம் 0003
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 6 7 3 5 5 3
L7 இலக்கம் 3 8
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1207 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,119,604.80
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 22 28 40 41 — விசேட எழுத்து W

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 486 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,361,188.60
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 11 20 43 58 — விசேட இலக்கினம் துலாம்

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1525 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 401,383,528.00
ஆங்கில எழுத்து Y — சுப்பர் இலக்கம் 17 — வெற்றி இலக்கங்கள் 08 37 77 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# பறிபோகும் தமிழர் வரலாற்று அடையாளச் சின்னங்கள்

## பாதுகாக்காவிட்டால் வரலாறுகள் புனையப்படலாம் என கலாநிதி ஆறுதிருமுருகன் சுட்டிக்காட்டு





தமிழர்களின் வரலாற்று அடையாளச் சின்னங்கள் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. இந்தச் சூழலில் அதனைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். தவறினால் வரலாறுகள் புனையப்பட்டு அழிக்கப்படும் நிலைமை ஏற்படும் என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாசல் திறப்பு விழா நேற்று முன்தினம் (16) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாசல் புனரமைக்கப்பட்டது போன்று ஏனைய வரலாற்று மரபுரிமைச் சின்னங்களும் புனரமைக்கப்பட்டு அவை அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, இங்குள்ள மந்திரி மனையை அடையாளப்படுத்திக் காப்பாற்றுவது போன்று ஏனைய வரலாற்று அடையாளச் சின்னங்களையும் அடையாளப்படுத்த வேண்டும்.

இன்றைக்கு தமிழர்களின் அடையாளச் சின்னங்கள் எல்லாம் பறிபோகின்றன. எனவே, வரலாற்று அடையாளங்களை நாங்கள் சரியாகப் போடாவிட்டால் அதைப் புனைந்து அழிக்க நெருங்கிவிடுவார்கள்.

இவ்வாறு எமது பாரம்பரிய வரலாற்று அடையாளச் சின்னங்களைப் பாதுகாக்க யாழ். பல்கலைக்கழக சமூகம் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

எங்கள் அடையாளச் சின்னங்கள் எங்கிருந்தாலும் கல்வெட்டுகள் போடுங்கள். அதைவிடுத்து எதுவும் இல்லாமல் அது இது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

மேலும் எங்கள் பாரம்பரிய அடையாளங்களை சொல்வதற்கு எம்மவர்களிடத்தே பொறுமை இல்லை. அந்தப் பொறுமையை அனைவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

# 34 ஆவது வீரமக்கள் தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு









தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 34 ஆவது வீரமக்கள் தினம் நேற்று (17) வவுனியாவில் இடம்பெற்றது.

கோயில்குளத்தில் அமைந்துள்ள தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் நினைவிடத்தில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது இவ்வமைப்பின் உபதலைவர் ராகவனால் நினைவுச்சுடர் ஏற்றப்பட்டதுடன், மறைந்த தலைவர் உமாமகேஸ்வரனின் உருவப்படத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனால் மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னாள் வடமாகாண சபை விவசாய அமைச்சர் க. சிவநேசன் தலைமையில் இடம்பெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில், கட்சியின் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# தீவக கல்வி வலய அதிகாரிகள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம் தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையொன்றில் மாணவியொருவர் அதிபரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு சென்ற கல்வித் திணைக்கள அதிகாரிகள் மீது நேற்று (17) தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தீவகம், மண்கும்பான் பகுதியிலுள்ள பாடசாலை யொன்றில் கடந்த புதன்கிழமை தரம் 4 இல் கல்வி கற்கும் மாணவியொருவர் மீது பாடசாலை அதிபர் தாக்குதல் நடத்தியுள்ளதாகப் பெற்றோரினால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே நேற்று முன்தினம் (16) அந்தப் பாடசாலையின் அதிபர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், நேற்று தீவக வலயக் கல்வி அதிகாரிகள் சிலர் விசாரணை மேற்கொள்வதற்காக பாடசாலைக்குச் சென்றுள்ளனர். இந்நிலையில், அங்கு கூடியிருந்த பொதுமக்கள் கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நிரந்தர நியமனத்தைப் பெற்றுத்தாருங்கள்

## டெங்கு தடுப்பு உதவியாளர்கள் ஆர்ப்பாட்டம்



சாவகச்சேரி நிருபர்

தமது நியமனத்தை நிரந்தரமாக்கக்கோரி வடக்கு மாகாண டெங்கு தடுப்பு உதவியாளர்கள் நேற்று (17) கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாணசபை முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஏழு வருடங்களுக்கும் மேலாக நிரந்தர நியமனமின்றி 22,000 ரூபா கொடுப்பனவிற்கு பணிபுரிந்துவரும் டெங்கு தடுப்பு உதவியாளர்கள், இதுவரை அரசாங்கம் தமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தத் தவறியதாக சுட்டிக்காட்டி கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது "அரசே, டெங்கு கள உதவியாளர்களை நிரந்தரமாக்க வேண்டும், ஏழு வருடங்கள் கடந்தும் எமக்கு நிரந்தர நியமனம் இல்லை, 22,000 ரூபா ஊதியம் எமது வாழ்வாதாரத்திற்கு போதுமா?" உள்ளிட்ட வசனங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



இதன்போது வடக்கு மாகாணத்தில் டெங்கு தடுப்பு உதவியாளர்களாகக் கடமைபுரியும் 50 இற்கும் மேற்பட்ட தற்காலிக பணியாளர்களே போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று போராட்டத்திற்கு வலுச்சேர்த்ததுடன் நியமனம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் உறுதியளித்திருந்தார்.

போராட்டத்தின் நிறைவில் டெங்கு தடுப்பு கள உதவியாளர்களால் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு மகஜர் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் பொலிஸ் அதிகாரிக்கு காயம்



வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் கடமையிலிருந்த போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் விபத்துக்குள்ளாகியுள்ளார். மோட்டார் சைக்கிள் மோதுண்டமையினாலேயே பொலிஸ் அதிகாரி இவ்வாறு காயமடைந்துள்ளதுடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் வீதிக் கடமையிலிருந்த போக்குவரத்துப் பொலிஸார் வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றை வீதியின் குறுக்காகச் சென்று வழிமறித்தபோது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் போக்குவரத்துப் பொலிஸாருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் குறித்த மோட்டார் சைக்கிளின் சாரதி வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அரகல காரியாலயங்கள் தற்போது அநாதை இல்லங்களாகக் காட்சி

## இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் விசனம்





கண்டி நிருபர்

கடந்த வருடம் ஏற்படுத்தப்பட்ட அரகல என்ற கலகக் காரர்களது காரியாலயங்கள் இன்று அநாதை இல்லங்கள்போல் காட்சியளிக்கின்றன.

-இவ்வாறு இளைஞர் விவகார விளையாட்டுத் துறை இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்க மாத்தளை மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நீர்த்தேக்கங்களை அபிவிருத்தி செய்யும் நீர்ப்பாசன சபை அமைக்கும் நிகழ்வில் ஞாயிற்றுக்கிழமை (16)கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களை 25மில்லியன் யூ.எஸ். டொலர் செலவில் அபிவிருத்தி செய்யும் நீர்ப்பாசன சபை (வெவ் சபாவ) நிகழ்வு பரவலாக இடம்பெற்று வருகின்றது.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரகல என்ற கழகக் காரர்களது செயற்பாடு நாட்டில் உச்சத்தை எட்டியுள்ளது எனக் கூறிய எதிர்க்கட்சி அங்கத்தவர்களின் செயற்பாடுகளும் சில தீய சக்திகளும் இருந்த இடமே தெரியாமல் இன்று மறைந்து விட்டன.

தேசிய தேவையை உணர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவுடன் ஏற்படுத்திய அரசு இன்று சரியான திசையில் பயணித்து அது அடைய வேண்டிய இலக்கை படிப்படியாக அண்மித்துள்ளது - என்றார்.

நாடளாவிய ரீதியில் இன்று குளம் குட்டைகள் மற்றும் நீர் மூலாதாரங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் மாத்தளை மாவட்டத்திலும் குறிப்பிட்ட இடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. அதன்படி இன்று மாத்தளை, இரத்தோட்டை மக்குலேதென்ன என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு 5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 300 ஏக்கர் பரப்பில் 5,000 விவசாயிகள் வரை பயனடையவுள்ளனர். அரகல என்ற கலகக் காரர்கள் நடுநிலைப் போக்குடையவர்கள் என்று கூறப்பட்டபோதும் அவர்கள் சகலரும் இன்று அரசியல் கட்சிகளின் பக்கமே சாய்ந்துள்ளனர் - என்றார்.

மாத்தளை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் எல்.ரியால்தீன், மாத்தளை உதவி கமநல சேவைகள் ஆணையாளர் டிக்கிரி குமாரி ஹாமி உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# காணவில்லை



மஸ்கெலியா நிருபர்

நாவலப்பிட்டி, கலபொடமேற்பிரிவில் வசித்து வந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான தம்பர் குமார் (வயது 54). கறுத்த நிறமுடைய கறுப்புச் சட்டையும் நீல நிற சாரமும் அணிந்த சுமார் 6 அடி 6 அங்குல உயரமான இவரை கடந்த 10 .7. 2023 முதல் காணவில்லை.

அவர் வீட்டிலிருந்து செல்லும்போது யாரிடமும் எதுவும் கூறாது காலை 11:30 மணி அளவில் சென்று இன்றுடன் நான்கு நாட்கள் ஆகியுள்ளன. அவர் பற்றிய எந்தத் தகவலும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இதனையடுத்து அவரது குடும்பத்தினர் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்துள்ளனர்.

இவரை நேற்று முன்தினம் வட்டவளை பகுதியில் சிலர் கண்டதாகவும் தெரியவந்துள்ளது. தயவு செய்து இவரைக் காண்போர் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ கீழ் குறிப்பிட்டுள்ள கையடக்கத் தொலைபேசிக்கோ அறிவிக்குமாறு கட்டுக்கொள்கின்றனர். 0768036926 .

# கலைஞர்கள் -பத்திரிகையாளர்கள் கௌரவிப்பு



கண்டி நிருபர்

மலையக கலை, கலாசார சங்கம் (இரத்தின தீபம்) கண்டி வீரகெப்பெட்டிப்பொல மண்டபத்தில் நடத்திய இந்திய அரசியல் அமைப்பின் தந்தை அம்பேக்கர், ஈழத்து சினிமா, மேடை நடிகை கண்டியூர் சந்திரா(ஈழத்து அஞ்சலிதேவி) மற்றும் கலைஞர் விஸ்வநாத ராஜா ஆகியோரின் நினைவு தின வைபவத்தில் கலைஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் பலர் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்வைபவத்தில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, பேராசிரியர் துறை மனோகரன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து விருதுகளை வழங்கினர். ஊடகவியலாளர்களான ஜே. எம். ஹாபீஸ்(வத்துகாமம்), டி.வசந்தகுமார்(நாவலப்பிட்டி , இக்பால் அலியார்(குருணாகல்), மொகமட் ஆஸிக் (ஹாரிஸ்பத்துவ), கே.எம்.ரஸூல் (கண்டி), சுதாகர் மாத்தளை, சுதந்திர ஊடகவியலாளர் கண்டி ஏ.ஆர். இராமன் முதலான தமிழ் ஊடக வியலாளர்களும் மற்றும் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

# டென்மார்க் சுற்றுலாப் பெண் மரணம்! மேலதிக விசாரணைகள் ஆரம்பம்



கண்டி நிருபர்

மலையேறச் சென்ற டென்மார்க் சுற்றுலாப் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டதையடுத்து இறந்ததற்கான காரணத்தைக் கண்டறிய மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில், சுற்றுலாப் பெண்ணின் சடலத்தை அடையாளம் காண்பதற்காக அவரது தோழியொருவர் இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

கடுகண்ணாவ பிரதேசத்தில் மலை ஏறச் சென்ற 32 வயதுடைய டென்மார்க் சுற்றுலாப் பெண்ணின் சடலத்தை சிங்க ரெஜிமண்ட் படைப் பிரிவினர் சனிக்கிழமை (15) மீட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் அவர் தங்கியிருந்த கண்டி - அம்பிட்டிய வீதி சுற்றுலா விடுதிக்கு மீண்டும் திரும்பி வராததையடுத்தே அவரைத் தேடும் படலம் ஆரம்பமானது.

டென்மார்க் நாட்டைச் சேர்ந்த 32 வயதுடைய மேற்படி காரப் மன்க் எப்சன் என்ற யுவதி அவர் தங்கியிருந்த விடுதியிலிருந்து பொத்தபிட்டிய பிரதேசத்திலுள்ள அலகல்ல மலைக்கு ஏறப் போவதாக தங்குமிடத்திலுள்ள ஊழியர்களுக்கு அறிவித்திருந்ததாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. ஆனால், அவர் விடுதிக்குத் திரும்பாததை யடுத்து இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர் கடந்த 10ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார்.

சம்பவம் தொடர்பில் கண்டி சுற்றுலா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். அதன்படி குறித்த வெளிநாட்டுப் பெண்ணின் சடலம் அவர் செல்வதாகக் கூறிய பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. அலகல்ல மலைப் பகுதியில் உள்ள பாறையில் இருந்து சிலவேளை இவர் வழுக்கி விழுந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மரணத்திற்கான சரியான காரணத்தைக் கண்டறிய சம்பவம் தொடர்பில் கண்டி மற்றும் பொத்தபிட்டிய பொலிஸ் நிலையங்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், அவரது சடலத்தை அடையாளம் காண்பதற்காக அவரது தோழி ஒருவர் தூதரக அதிகாரிகளுடன் கண்டிக்குச் செல்லவுள்ளார்.குறித்த பெண்ணின் உடல் மலை அடிவாரத்தில் கண்டெடுக்கப்பட்ட போது உடல் அழுகிய நிலையில் காணப்பட்டது. இப்பிரதேசத்தில் நிலவும் குளிர் காலநிலை காரணமாக உடல் விரைவாக சிதைவடையவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பிய பிறகே அவரது இறப்புக்கான காரணம் தெரியவரும். அவரது மரணம் குறித்து இந்தியாவில் உள்ள டென்மார்க் தூதரகம் மூலம் அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்க வெளியுறவு அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது. மலையேறுவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்ததாகக் கூறப்படும் டென்மார்க் பெண்ணின் சடலம் தற்போது கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலம் கண்டெடுக்கப்பட்ட போது 20 டொலர் தாள்கள் ஐந்தும் இரண்டு 05 டொலர் தாள்கள் மற்றும் 62,000 இலங்கை நாணயங்களும் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதாவது, 110 டொலர்களும் 62 ,000 ரூபா இலங்கைப் பணமும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவரது கையடக்கத் தொலைபேசி இன்னும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# காலாவதியான உணவுப்பொருட்கள் கண்டி நகரில் கண்டுபிடிப்பு





கண்டி நிருபர்

கண்டி நகரத்தில் பாவனைக்குதவாத- காலாவதியான உணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் (16) கைப்பற்றப்பட்டன.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேயின் வேண்டுகோளுக்கிணங்க கண்டி மாநகர சபை சுகாதாரப் பிரிவு ஊழியர்கள் இதனைக் கண்டுபிடித்தனர்.

சொக்லேட், இனிப்பு வகைகள் மற்றும் பல்வேறு வகையான தின்பண்டங்கள், பொதி செய்யப்பட்ட உணவுகள், பிஸ்கட்டுகள், பால்வகைகள் போன்றனவே இவ்வாறு கைப்பற்றப்பட்டவையாகும்..

# யுவதியின் மரணத்தை பொறுப்பேற்று சுகாதார அமைச்சர் பதவி விலகவும்

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

சாவகச்சேரி நிருபர்

பேராதனை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட தவறான சிகிச்சை காரணமாக உயிரிழந்த யுவதியின் மரணத்துக்கான முழுப் பொறுப்பையும் சுகாதார அமைச்சர் ஏற்று தனது பதவியைத் துறக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணசபை முன்பாக நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற டெங்கு கள பணியாளர்களது போராட்டத்துக்குச் சென்றபோது ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியல் தலைவர்களின் பாரிய ஊழல் மோசடிகளாலேயே நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது.

இதனால் சுகாதாரத்துறை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.வைத்தியசாலைக்கு செல்வதென்றால் மக்களுக்கு மரண பயம் ஏற்படுகின்றது.கடந்த வாரம் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதி தவறான சிகிச்சை காரணமாக உயிரிழந்திருந்தார்.இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.



இதற்கான முழுப் பொறுப்பையும் சுகாதார அமைச்சரே ஏற்கவேண்டும்.யுவதியின் மரணம் தொடர்பாக சுகாதார அமைச்சர் ஊடாக மேற்கொள்ளப்படும் விசாரணை எந்தளவுக்கு நியாயமானதாக,உண்மைத் தன்மை கொண்டதாக இருக்கும் என்பதில் எமக்கு சந்தேகம் உள்ளது.

கடந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஒருவரே தற்போதைய சுகாதார அமைச்சர். நாடு வங்குரோத்து நிலைமைக்கு சென்றதற்கு அவரும் ஒரு காரணம்.

தொடர்ந்தும் சுகாதாரத் துறையில் தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன.சுகாதார அமைச்சர் காரணங்களைக் கூறி பதவியில் இருப்பது நியாயமற்ற செயற்பாடு.தன்னுடைய தவறை ஏற்று பதவி விலக வேண்டும். சுகாதாரத் துறையில் சீர்கேடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.

பல வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லை.இருக்கும் வைத்தியர்களும் உரிய நேரத்தில் கடமைக்குச் செல்வதில்லை.கடமை நேரத்தில் முழுமையாக வைத்தியசாலையில் இருப்பதும் கிடையாது.கிராம வைத்திய சாலைகளில் இவ்வாறான பல குறைபாடுகள் உள்ளன.இவை அனைத்துக்கும் சுகாதார அமைச்சரே பொறுப்பு எனவும் கூறினார்.





உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதையம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் முதற்கரகம் (16)ஆண்டிமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலிலிருந்து ஊர்வலமாகச் சென்ற போது..........

படப்பிடிப்பு: உடப்பு செய்தியாளர்

# பாணந்துறை எழுவில் கிராமத்தில் கலைவாதி கலீல் நினைவேந்தல்



ஏ.எஸ்.எம்.ஜாவித்

கலை, இலக்கியத்துறையில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்த கலைவாதி கலீல் மறைந்து இன்றுடன் (18) நாற்பது நாட்கள் பூர்த்தியாகின்றன. இதனை முன்னிட்டு அன்னாரது குடும்பத்தினர் பாணந்துறை,எழுவில் கிராமத்தில் அமைந்துள்ள அவரது வீட்டில் மிகவும் எளிமையான முறையில் அவரது பெயரில் புனித அல் -குர்ஆன் தமாம் நிகழ்வொன்றை நடத்தவுள்ளனர்.

இலங்கையின் இலக்கிய வரலாற்றிலே அசைக்க முடியாத ஓர் இடத்தைத் தக்கவைத்துள்ள எழுத்துத் துறையின் ஜாம்பவானாகத் திகழ்ந்தவர் கலைவாதி கலீல்.

1943 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி மன்னார், சோனகத் தெருவில் ஒரு கலைக் குடும்பத்திலே பிறந்த கலைவாதி கலீல் கடந்த 09.06. 2023 அன்று காலமானார்.

கலைவாதி கலீல் ஒரு சிறந்த ஆசிரியராக மட்டுமல்லாது பல்துறைகளிலும் சிறந்து விளங்கியவர். அத்துடன், ஊடகத்துறையிலும் கால்பதித்து தனது தமிழ் திறமை மூலம் பல பத்திரிகைகளுக்கு செய்திகளையும் ஆக்கங்களையும் எழுதி வழங்கியவர்.

இவ்வாறு சிறந்து விளங்கிய கலைவாதி கலீலின் இழப்பு கலை உலகுக்கும் ஊடகத்துறைக்கும் பாரிய இழப்பு என்றே கூறலாம். தமிழ் மொழி புலமை கொண்ட இவர் பல புதிய தலைமுறைக்கு தமிழ் மொழி ஆற்றலை முறையாகப் பயிற்றுவித்து வந்ததுடன் சித்திரக்கதை உட்பட ஏனைய பல நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (17.07.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 212.1166 | 224.9611 |
| கனேடியன் டொலர் | 235.2149 | 249.0062 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.9664 | 46.2191 |
| யூரோ | 350.9697 | 368.7840 |
| ஜப்பான் யென் | 2.2529 | 2.3705 |
| சிங்கப்பூர் டொலர் | 236.2418 | 248.7660 |
| ஸ்ரேலிங் பவுன் | 408.8345 | 429.4727 |
| சுவிஸ் பிராங்க் | 360.2666 | 382.8745 |
| ஐ.அ. டொலர் | 313.2921 | 327.1641 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846.4962 |
| குவைட் | குவைட் தினார் | 1,042.0945 |
| ஓமான் | ஓமான் ரியால் | 828.9170 |
| கட்டார் | கட்டார் ரியால் | 87.5478 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய ரியால் | 85.0659 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86.8828 |

# நினைவேந்தலும் கௌரவிப்பு நிகழ்வும்



இக்பால் அலி

மலையக கலை, கலாசார (இரத்தின தீப) சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர் டாக்டர் அம்பேத்கார், இலங்கையின் திரைப்பட நடிகர், ஆய்வாளர், சித்த வைத்தியர், கலைஞர் விஸ்வநாத ராஜா, இலங்கை தமிழ்த் திரைப்பட நடிகை அஞ்சலி தேவி கண்டியூர் சந்திரா ஆகியோர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வும் கல்வி, சமூக நல அபிவிருத்தி, ஊடகத்துறை சார்ந்தவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் வைபவமும் கண்டி கெப்பட்டிப்பொல ஞாபகார்த்த மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் ராஜா ஜேகின்ஸ் தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் துணைத் தலைவரும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பரத் அருள்சாமி,சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் துரை மனோகரன், கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் முன்னாள் செயலாளரும் இந்து இளைஞர் மன்றத்தின் பொருளாளருமான சமூகப்பணியாளர் எஸ். பரமேஸ்வரன், சமூகப் பணியாளர் எஸ். தியாகராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

குண்டசாலை விவேகானந்தா தமிழ் வித்தியாலய அதிபர் எஸ். சிவஞானசுந்தரம் தொகுத்து வழங்கிய இந்நிகழ்வில் கண்டி இந்து சிரேஷ்ட கல்லூரியின் அதிபர் கவிஞர் பெ. சிவகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார். இலங்கையின் திரைப்பட நடிகர், ஆய்வாளர், சித்த வைத்தியர், கலைஞர் விஸ்வநாத ராஜா பற்றிய நினைவேந்தல் உரையை அவரது மனைவி இஸ்மாலிகா விஸ்வநாத ராஜா நிகழ்த்தினார்.

இதன்போது இலங்கை சிங்களத் திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர் பத்ம ஸ்ரீ கொடிகார, சந்திரதனா ரட்ணராஜ குருக்கள், கேசகர் மூர்த்தி, ரொபட் டேனியல், தேசாபிமாணி ரவிச்சந்திரன், சமூக சேவையாளர் கே. எம். அமீனுல்லா, எஸ். ஏ. ஹனீப், நாவலப்பிட்டி முருகன், ஜயவீர, அஷ்ஷெய்க் எவ். எம். ரசாத், ஈழத்து பாலசுப்ரமணியம் பழீல், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் கலாபூஷணம் இரா. அ. இராமன், முஹமட் வைஸ், சிங்கள திரைப்பட சின்னத்திரை நடிகர் ரோஹித மானகே, மீரா மொஹமட் ஜாசிம், தேசாபிமாணி சில்மியா சஹாப்தீன், ஊடகவியலாளர்களான ஜே. எம். ஹாபிஸ், டி. வசந்தகுமார், கே. எம். ரசூல், எஸ். சுதாகரன், இக்பால் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சகவாழ்வு சங்கங்கள் ஒன்றிணைந்த கலாசார நிகழ்வும் கருத்துக்களமும்

மாளிகைக்காடு செய்தியாளர்





மனித அபிவிருத்தி தாபனத்தினால் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் கனடா பங்காளர் நிறுவன அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டம் (NLEAP)அம்பாறை மாவட்டத்தில் சகவாழ்வு சங்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஓர் அங்கமாக சகவாழ்வு சங்கங்கள் ஒன்றிணைந்த கலாசார நிகழ்வும் கருத்துக்களமும் கல்முனை கிரிஸ்டா இல்லத்தில் மனித அபிவிருத்தி தாபன அம்பாறை மாவட்ட உதவி இணைப்பாளர் எம்.ஐ.றியால் தலைமையில் அண்மையில் (13) நடைபெற்றது.

கலாசார நிகழ்வுகளுடன் கூடியதாக நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ.அப்துல் அஸீஸ் உட்பட பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள், வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், சிவில் அமைப்புகளின் பிரதானிகள், இளைஞர் சமூக அமைப்புகளின் பிரதானிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள், பாடசாலை அதிபர்கள், மத போதகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தினூடாக சகவாழ்வு சங்கங்களின் இயலுமையை மேம்படுத்தி அதனூடாக மொழி உரிமைகள், மொழிக்கொள்கை அமுலாக்கம், சமூகங்களுக்கிடையிலான நல்லுறவை வலுப்படுத்தல் போன்றவற்றை இலக்காகக் கொண்ட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்வானது பல்லின சமூகங்களினதும் கலாசாரத்தை வெளிப்படுத்தும் நிகழ்வாகவும் பிராந்தியத்தில் சமூக ஒருமைப்பாடு, இரண்டாம் மொழி கல்வியின் முக்கியத்துவம்,மொழிக்கொள்கை அமுலாக்கத்தின் நிலைமைகள் தொடர்பான கருத்துக்களமாகவும் நடைபெற்றது.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com



கந்தளாய் தள வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதிக்குத் தேவையான படுக்கை விரிப்புகள் மற்றும் தேவையான மேலதிக துணி வகைகளை கந்தளாய் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் கந்தளாய் தள வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் கையளிப்பதைக் காணலாம். படப்பிடிப்பு: கந்தளாய் செய்தியாளர்

# கோவிலூர் விஜிதாவின் 'புது வரவு' நூல் வெளியீடு

கோணாவத்தை செய்தியாளர்

கோவிலூர் விஜிதாவின் 'புது வரவு' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அம்பாறை மாவட்ட ஏ.எல்.ஏ.திருவதிகை கலைக்கூடத்தின் வழிகாட்டலில் திருக்கோவில் கலாசார மண்டபத்தில் ஈழகவி எஸ்.கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.ஏ.என்.கே.தமயந்த விஜயசிறி, திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும் சிவஸ்ரீ ரீ.அங்குசநாதக் குருக்கள், எஸ்.சித்திர வேலாயுதசுவாமி, அருள்திரு எஸ்.டி. தயாசீலன், மெதடிஸ்த திருச்சபை திருக்கோவில் போன்றோர் ஆன்மிக அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அம்பாறை மாவட்ட எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள், இலக்கியவாதிகள் மற்றும் கல்வியியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ள இந்நிகழ்வின் வெளியீட்டு விழாவில் முதற்பிரதியை நூலாசிரியர் தனது தாய், தந்தையினருக்கு வழங்கி வைக்கவுள்ளார்.

# மாணவர்களுக்கு சப்பாத்து வழங்கல்



பொலிவேரியன் செய்தியாளர்



சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைத் தெரிவு செய்து அக்குடும்பங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சப்பாத்துகள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) இடம்பெற்றது.

Familes relief, sadaqa bulletin நிறுவனங்களின் அனுசரணையில், கிராம உத்தியோகத்தர் எல்.நாஸர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஸதகா புல்லட்டின் மற்றும் பெமிலி ரிலீவ் நிறுவனங்களின் பிரதிநிதியும் பொறியியலாளருமான எம்.சி.கமால் நிஷாத் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ஏ.சீ.எம்.றியாஸ், இலங்கை உயர்கல்வி கற்கை நிறுவகத்தின் ஆங்கிலப் பாட விரிவுரையாளர் யூ.எல்.எம்.நௌஷாத், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், சாய்ந்தமருது பிரதேச செயலக நிதியுதவியாளர் ஏ.சீ.முஹம்மட் மற்றும் சக கிராம உத்தியோகத்தர்களான எம்.எம்.மாஹிர், எல்.நாஸர், ஏ.எம்.அஜ்ஹர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஏ.இம்ரான், இளைஞர் வள நிலைய உத்தியோகத்தரும் முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.ஜீ.அன்வர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புத்தகப் பைகள் மற்றும் சப்பாத்துகளை வழங்கி வைத்தனர்.

# கடற்கரை தூய்மைப்படுத்தல் செயற்றிட்டம் முன்னெடுப்பு







கல்லடி செய்தியாளர்

கிழக்கு மாகாணத்தில் தன்னலமற்ற தொண்டர் சேவையை மேற்கொண்டுவரும் ஹெல்ப் எவர் அமைப்பின் 250ஆவது செயற்றிட்டமாக 'நாவலடி கடற்கரையில் பிளாஸ்ரிக்கை ஒழிப்போம்' எனும் தொனிப்பொருளில் விசேட செயற்றிட்டமொன்று ஞாயிற்றுக்கிழமை (16) மேற்கொள்ளப்பட்டது.

இவர்கள் கடந்து வந்த ஆரம்ப வளர்ச்சிப் பாதையை நினைவுகூரும் வகையில் பயனுள்ள செயற்றிட்டமாக கடற்கரை மாசடைவதினால் மனிதனுக்கு ஏற்படவிருக்கும் நோயை இயன்றவரை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் கடற்கரையைச் சுத்தம் செய்யும் பணியை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சின்னஞ் சிறார்களும் இயற்கையின் மொழி அமைப்பினரும் ஹெல்ப் எவர் அமைப்பின் நலன் விரும்பிகளும் இணைந்திருந்தனர்.

# பிரதான பொலிஸ் பரிசோதகர் மஜீத் ஓய்வு

அம்பாறை மாவட்ட செய்தியாளர்



அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் பெருங்குற்றப்பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய பிரதான பொலிஸ் பரிசோதகர் மீராசாஹிப் அப்துல் மஜீத் வெள்ளிக்கிழமை(14) பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

சம்மாந்துறைப் பிரதேசத்தில் இஸ்மாலெப்பை மீராசாஹிப் - சின்னலெப்பை ஆசியா உம்மாவுக்கு மகனாக 1963ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தனது கல்வியை சம்மாந்துறை அல்-மர்ஜான் தேசிய பாடசாலையில் கற்றதுடன், 1985ஆம் ஆண்டு பொலிஸ் சேவையில் இணைந்தார். இவருக்கு ஐந்து மகன்கள் உள்ளனர்.

அப்துல் மஜீத் தனது சேவைப்பயிற்சியை மஹியங்கனை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நிறைவு செய்ததுடன் கல்குடா பொலிஸ் நிலையத்தில் தனது முதலாவது நியமனத்தைப் பெற்றார். இதனைத் தொடர்ந்து கொழும்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்ட பொலிஸ் நிலையங்களில் தனது சேவையைத் தொடர்ந்துள்ளார். அத்தோடு 1994ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரை விசேட அதிரடிப்படையில் இணைக்கப்பட்டு அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று மற்றும் மல்வத்தை விசேட அதிரடிப்படை முகாம்களில் உதவிப் பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றியுள்ளார்.

மீண்டும் 2000ஆம் ஆண்டு முதல் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட இவர், கடமையாற்றிய பிரதேசங்களில் பொதுமக்களுடன் சிநேகபூர்வமாகப் பழகியதன் காரணமாக பல குற்றச் செயல்களை இனங்கண்டதுடன், குற்றச் செயல்களைத் தடுக்கவும் குற்றவாளிகளைக் கைதுசெய்யவும் இவரால் முடிந்தமை சிறப்பம்சமாகும்.

பிரதான பொலிஸ் பரிசோதகர் அப்துல் மஜீத்துக்கான பிரியாவிடை நிகழ்வானது, அக்கரைப்பற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சமன் பண்டார வழிகாட்டலில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜயதுங்க பண்டார தலைமையில் மிக விமர்சையாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அவரைக் கௌரவிக்குமுகமாக பரிசில்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டதுடன், அவரின் சேவையைப் பாராட்டி தமது நன்றி கலந்த வாழ்த்துகளை விசேட அதிதிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.




**சாய்ந்தமருது கோட்டமட்டப் பாடசாலைகளுக் கிடையிலான தமிழ்மொழி தின போட்டிகள் அண்மையில் இடம்பெற்றபோது சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயத்திலிருந்து கலந்துகொண்ட மாணவர்கள் 05 முதலிடங்களையும் 03 இரண்டாம் இடங்களையும் 06 மூன்றாம் இடங்களையும் பெற்று கனிஷ்ட பிரிவில் பெரு வெற்றியைப் பெற்றுள்ளனர். பாடசாலை அதிபர் எம்.எம்.சம்சுதீன் வெற்றிபெற்ற மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டிக் கௌரவித்தார்.**

**படப்பிடிப்பு:** நிந்தவூர் செய்தியாளர்

# பாண்டிருப்பில் இந்து சமய விழிப்புணர்வுக் கருத்தரங்கு

பாண்டிருப்பு செய்தியாளர்



அம்பாறை மாவட்ட ஹிந்து ஸ்வயம் சேவக சங்கம் ஏற்பாட்டில் குருபூசை தினங்கள் மற்றும் சமய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. இதனொரு அங்கமாக பாண்டிருப்பு காளிகோவில் மண்டபத்தில் அம்பாறை மாவட்ட ஹிந்து ஸ்வயம் சேவக சங்கம் இரா.குணசிங்கம் தலைமையில் இந்து சமய விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

இதன்போது அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். இந்து சமய சடங்குகள், சம்பிரதாயங்கள், தத்துவங்கள், நாயன்மார்கள், சித்தர்கள், சமய, சமூக வாழ்வியல் தொடர்பில் அறிவூட்டும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் இந்து சமய ஆசிரிய ஆலோசகர் எம்.லக்குணம், இந்து ஸ்வயம் சேவக சங்க கிழக்கு மாகாண பிரசாரகர் கே.வரதராஜன், ஆசிரியர் கே.ஆர்.தர்மராஜ் உட்படப் பலர் கலந்துகொண்டனர். இந்து ஸ்வயம் சேவக சங்கம் அம்பாறை மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் மத்தியில் இந்து மத பாரம்பரிய மரபுகளைப் பேணிப் பாதுகாக்கும் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





**அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சுற்றுப்புறச் சூழலை சுத்தப்படுத்தும் நோக்கில் சிரமதான நிகழ்வு வைத்தியசாலை வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை(16) நடைபெற்றது. வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ரஜாபின் வழிகாட்டலில் நடைபெற்ற சிரமதான நிகழ்வில் வைத்தியசாலைக் குழுவின் தலைவர் பொறியியலாளர் வை.பி.சமட் உட்பட குழு உறுப்பினர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள், உதவியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன் போது மரக்கன்றுகளும் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.** **படப்பிடிப்பு:** அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்

# முஹம்மத் ஹனீபாவுக்கு சமூக பாதுகாப்பு விருது

திராய்க்கேணி செய்தியாளர்




2021 மற்றும் 2022 சமூக பாதுகாப்பு விருதை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மத் ஹனீபா பெற்றுக் கொண்டதுடன் தேசிய ரீதியில் அம்பாறை மாவட்டம் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் அரச ஓய்வூதியம் பெறாதவர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் நன்மைகள் முறைமைக்காக அதிக பங்களிப்பு செய்த அரசாங்க அதிகாரிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு இலங்கை சமூக பாதுகாப்பு சபைத் தலைவர் சிரேஷ்ட பொறியியலாளர் பி.எஸ்.எஸ்.டிக்வெல்ல தலைமையில் அண்மையில்(13) திருகோணமலை ஜகாப் பீச் விடுதியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமூக பாதுகாப்பு உரிமைகளை வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மாவட்டத்தின் செயலாளர்கள், செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் இந்த அடைவை லாகுகல, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை - தமிழ்ப் பிரிவு மற்றும் திருக்கோவில் பிரதேச செயலகங்களும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



**மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழ் வழங்கிய நிகழ்வு அண்மையில் நாணல் கலை இலக்கிய வட்டத்தின் தலைவி ஆசிரியை ஸஊபா அப்துல் றவூப் தலைமையில் மருதமுனை ஒகாசியா கெஸ்ட் ஹவுஸில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி அதிதியாகக் கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் ஆகியோரால் நாணல் கலை இலக்கிய வட்டத்தின் தலைவி மற்றும் உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டது.**

**படப்பிடிப்பு:** மருதமுனை, மருதமுனை மேலதிக செய்தியாளர்கள்

# மட்டக்களப்பில் அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## சாணக்கியன் எம்.பி. மீதான தாக்குதல் முயற்சியால் பதற்றநிலை

*கனகராசா சரவணன்*




மட்டக்களப்பில் அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட சாணக்கியன் எம்.பி., சட்டவிரோத அனுமதிப்பத்திரம் வழங்கல் ஊழலில் அரசியல் கட்சி ஒன்றைச் சேர்ந்த தனியார் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி ஒருவர் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துக்கொண்டிருக்கும்போது அவரைத் தாக்க முற்பட்ட இருவரினால் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் பஸ்களை தடைசெய்யக்கோரி மட்டு. தனியார் பஸ் நிலையத்தில் அனைத்து பஸ்களையும் நிறுத்தி திங்கட்கிழமை(17) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அழைப்பு விடுத்ததையடுத்து அவர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.

பொலன்னறுவையில் உள்ள தனியார் பஸ் உரிமையாளர் ஒருவரின் இரு பஸ்களுக்கும் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் கிழக்கு மாகாண தனியார் போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு பொறுப்பாளராகக் கடமையாற்றி வந்த அரசியல் கட்சியொன்றின் உறுப்பினரொருவர் கடந்த 08 வருடங்களாக குறித்த பஸ் போக்குவரத்து சேவையில் ஈடுபட அனுமதி வழங்கி ஊழல் புரிந்துள்ளதாகவும் அந்த பஸ் உரிமையாளரின் பஸ் மட்டக்களப்பு - வாழைச்சேனை வரையிலான அனுமதிப்பத்திரத்துடன் பொலன்னறுவை கதுருவெலவில் இருந்து காத்தான்குடி வரையில் சட்டவிரோதமாக சேவையில் ஈடுபட்டுள்ளபோது மன்னம்பிட்டி விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்து சேவையில் ஈடுபட அனுமதி வழங்கிய கிழக்கு மாகாண தனியார் போக்குவரத்து சபை பணிப்பாளர் உட்பட அதிகாரிகள் மன்னம்பிட்டியில் 11 பேரையும் படுகொலை செய்துள்ளனர் என ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துக்கொண்டிருந்தார்.

இந்நிலையில், அங்கிருந்த இருவர் உண்மைக்குப் புறம்பாக பேசவேண்டாம் எனக் கூறியவாறு சாணக்கியன் எம்.பி. மீது தாக்க முற்பட்டவேளை, அங்கிருந்த பஸ் உரிமையாளர்கள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றிணைந்து அந்த இருவரையும் அங்கிருந்து துரத்தித் துரத்தி அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியதையடுத்து பொலிஸார் குறித்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான அராஜகங்களுக்கு நாங்கள் இடமளிக்கக்கூடாது, தனிநபர்களுக்காக வக்காளத்து வாங்கி இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தியதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதேவேளை, கொல்லப்பட்ட 11 பேருக்கும் நீதி கிடைக்க வேண்டும். இந்தச் சட்டவிரோத அனுமதிப்பத்திரம் வழங்கியமை தொடர்பாக பாராளுமன்றத்தில் பேசுவதுடன் நாளை(இன்று) ஜனாதிபதியுடனான அரசியல் சந்திப்பின்போது இந்த விடயம் தொடர்பில் விசேடமாகப் பேசவுள்ளதாக சாணக்கியன் எம்.பி. தெரிவித்தார்.

# படகில் தீ பற்றியதால் பதற்றம்

## உண்மைக்குப் புறம்பானதெனவும் தகவல்

*திருக்கோவில் மேலதிக செய்தியாளர்*

திருக்கோவில் பிரதேச கடற்பகுதியில் படகு தீ பற்றுவது போன்ற சம்பவம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை(16) இடம்பெற்றுள்ளது. இது குறித்த சம்பவமானது பிரதேச மக்களிடையே அதிர்வலைகளை ஏற்படுத்தியதுடன் கப்பல் ஒன்று எரிவது போன்று காட்சியளித்துள்ளது. இதன் பின்னர் உறுதிப்படுத்தப்படாத பல தகவல்கள் மக்களிடையே சமூக வலைத்தளங்களினூடாகப் பரப்பப்பட்டன.

வாழைச்சேனை மீனவர்களின் படகே இவ்வாறு தீ பிடித்திருப்பதாகவும் அதில் 05 மீனவர்கள் வரை இருப்பதாகவும் கடற்படையினர் விரைந்து நடவடிக்கை எடுப்பதாகவும் மேலும் தகவல்கள் பரப்பப்பட்டன.

குறித்த படகின் உரிமையாளருடன் தொடர்பை ஏற்படுத்திக் கேட்டபோது, இச்செய்தி உண்மைக்குப் புறம்பான செய்தி என்பதுடன் தமது படகுக்கு தீ விபத்து ஏற்படவில்லை என்றார். மேலும், தமது படகில் சென்ற மீனவர்கள் பாதுகாப்பாக உள்ளதாகத் தெரிவித்தார். குறித்த வெளிச்சமானது கடலில் பயணித்த சரக்குக் கப்பலின் வெளிச்சம் எனவும் அது பழுதடைந்துள்ள நிலையில், நங்கூரமிடப்பட்டபோது இவ்வாறான வெளிச்சம் நிலப்பகுதியில் தென்பட்டதாகவும் கப்பலில் உள்ள மீனவர்களைத் தொடர்பு கொண்டு கேட்டபோது தெரிவித்தனர். அதேவேளை, இவ்வாறான தவறான உண்மைக்குப் புறம்பான தகவல்களால் தமது குடும்ப உறுப்பினர்கள் நிம்மதியின்றி இருக்கின்றனர். தாம் எவ்வித பாதிப்புமின்றி தொழிலில் ஈடுபடுகின்றோம். வாழைச்சேனைப் பகுதியில் இருந்து 45 கி.மீ. தொலைவிலும் ஒலுவில் பகுதியில் இருந்து 14 கி.மீ. தொலைவிலும் தாம் தொழிலில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொலிஸாருடன் தொடர்பை ஏற்படுத்திக் கேட்டபோது இது தொடர்பில் முறைப்பாடுகள் எதுவும் பதிவாகவில்லை எனக் குறிப்பிட்டனர்.

# உயிரிழந்த நிலையில் கடலாமை மீட்பு

*திருக்கோவில் மேலதிக செய்தியாளர்*



அம்பாறை, காரைதீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இறந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை(16) மாலை கடலாமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் மீன்வளத்துறைத் திணைக்களப் பிரிவினருக்கு தாம் அறிவித்துள்ளதாக காரைதீவு பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் கடலாமை கரையொதுங்கிய பகுதியானது மீனவர்கள் அதிகம் மீன் பிடியில் ஈடுபடும் பகுதி என்பதால் மீனவர்களின் வலையில் இவை சிக்குண்டு இறந்திருக்கலாம் என காரைதீவு பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலும் குறித்த கடலாமையின் மேற்புறத்தின் ஓடு சிறிதாக சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது. கடலாமைகள் அரியவகை உயிரினமாகக் காணப்படுவதுடன் அவை அதிக காலம் உயிர்வாழும் உயிரினமாகும். இவை அதிகம் இறைச்சிக்காக சட்டவிரோதமாக வேட்டையாடப்படும் உயிரினமாகக் காணப்படுகின்றன.

# அரச பல்கலைகளுக்கிடையிலான 14ஆவது விளையாட்டுப்போட்டி குறித்த ஊடக சந்திப்பு



*கிரான் செய்தியாளர்*

2023ஆம் ஆண்டுக்கான அரச பல்கலைக்கழகங்களுக்கிடையிலான 14ஆவது விளையாட்டுப் போட்டி தொடர்பாக பொது மக்களுக்கும் மாவட்ட விளையாட்டு நலன் விரும்பிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊடக சந்திப்பு சனிக்கிழமை(15) கிழக்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் உபவேந்தர் பேராசிரியர் வி.கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த உபவேந்தர், இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும் 14ஆவது விளையாட்டுப் போட்டியை வடக்கு, கிழக்கு தமிழ் பல்கலைக்கழகங்களில் முதன் முதலில் கிழக்கு பல்கலைக்கழகம் நடத்துவதில் பல்கலைக்கழகமும் கிழக்கு மாகாணமும் பெருமை கொள்கின்றது எனவும் தெரிவித்தார்.

மேலும், இப்போட்டியானது எதிர்வரும் செப்டெம்பர் 01ஆம் திகதி தொடக்கம் 08ஆம் திகதிவரை 16 அரச பல்கலைக்கழகங்களை ஒன்றிணைத்து நடைபெறும் என்றும் இப் போட்டியில் 40 விளையாட்டுகளிலும் 24 விளையாட்டுப் போட்டிகளும் 6,000இற்கும் மேற்பட்ட போட்டியாளர்களும் பங்கு பெறுகின்றார்கள்.

இப்போட்டியானது பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்காமல் கற்றலுடன் இணைந்த செயற்பாடாக விளையாட்டும் அமைந்திருப்பதனால் விளையாட்டுத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை இனங்கண்டு சான்றிதழ் வழங்குவதுடன் மேலதிகமாக, இலங்கை பல்கலைக்கழகத்தை பிரதிநிதித் துவப்படுத்துகின்ற சர்வதேச போட்டிகளில் பங்குபெறும் வாய்ப்புகளை ஈட்டிக்கொடுப்பதே இவ் விளையாட்டின் நோக்கமாகும்.

விளையாட்டுப் போட்டி நிறைவு நாளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன, கல்வியமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, உயர்கல்வி அமைச்சர் சுரேன் ராகவன், அமைச்சின் செயலாளர்கள், பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள் எனப் பலரும் கலந்துகொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அஸ்வெசும திட்டத்துடன் இணைந்ததான சமுர்த்தி பலப்படுத்தும் வேலைத்திட்டம்

*திராய்க்கேணி செய்தியாளர்*



அஸ்வெசும நலன்புரித்திட்டத்துடன் இணைந்ததான சமுர்த்தி பலப்படுத்தல் வேலைத்திட்ட அறிவூட்டல் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (17) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலகப்பிரிவில் கடமையாற்றும் தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர், வங்கிச்சங்க முகாமையாளர், வங்கி முகாமையாளர்கள், கருத்திட்ட முகாமையாளர், வலய உதவியாளர்(Zone Assistant), மகாசங்க நிறைவேற்றுக்குழுத் தலைவர் மற்றும் வங்கி கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டதுடன் மாவட்ட சமுர்த்தி காரியாலய தமிழ்பேசும் முகாமையாளர்கள், கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் வங்கி மேற்பார்வை உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அஸ்வெசும திட்டத்துடன் இணைந்த வகையில் சமுர்த்தித் திட்டத்தையும் வங்கி நடவடிக்கைகளையும் மேற்கொள்வதனூடாக சிறிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்தி சமுர்த்தி வங்கியின் வாடிக்கையாளர்களின் மேம்பாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதே இப்பயிற்சித்திட்டத்தின் நோக்கமாக அமைந்திருந்தது.

இதன் வளவாளராக மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் கலந்து கொண்டு எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாக மிக ஆக்கபூர்வமான கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



***தேர்தல நடத்தக்கோரி இணைந்து குரல்கொடுக்க வாங்க எண்டு எதிர்கட்சித் தலைவர் சஜீத் பிரமதாசா எல்லாப்பேரையும் கூப்பிடிறாரு எலுவா? அடே பொடியா உள்ளூராட்சி தேர்தல் நடத்தாட்டி மலையப்புழந்து மாமலத்தில சாத்துவன், போராடுவன், நீதிமன்றம் போவன் எண்டு வாயால வட சுடுற உன்ன நம்பி ஆருடா வருவானுகள். ஒரு வேள மட்டக்களப்புல இருந்து லண்டனில குடும்பம் நடத்திற ஒன்ட அமைப்பாளர் சீசன் வியாபாரி கணேசமூர்த்தி மட்டும் வருவானோ? இல்ல இப்ப அவனும் ரணிலோட போனானோ ஒருக்கா தேடிப்பாரு..!***

# தேரரை தாக்கியவர்களை ஏன் கைது செய்யவில்லை?

## விமலவீர திசாநாயக்க எம்.பி. கேள்வி

*அம்பாறை மாவட்ட செய்தியாளர்*



போராட்டத்தில் பங்கேற்பதற்கு சென்றவர்களுக்கு அறிவுரை கூறியதன் பின்விளைவே தேரர் மீதான தாக்குதலாகும். எனினும், தாக்குதல் மேற்கொண்டவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். இத்தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு பொலிஸார் இருக்கின்றனர். இதனால் எமது நாட்டின் சட்டம் எங்கே செல்கின்றது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகின்றது என முன்னாள் வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான விமலவீர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை(16) இரவு நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

கடந்த ஜூலை 10ஆம் திகதி மாலை 07 மணியளவில் அம்பாறை மாவட்டம் தமண பிரதேச செயலகத்துக்குட்பட்ட பௌத்த விகாரை ஒன்றின் தேரர் ஒருவர் சிலரால் தாக்கப்பட்ட நிலையில், தற்போது சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த தேரர் மீது ஐவர் கொண்ட குழு தாக்குதல் மேற்கொண்டிருந்ததாக அறிய முடிகின்றது. தற்போது தாக்குதல் இடம்பெற்று 06 நாட்கள் கடந்தும்கூட பொலிஸாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தேரரை தாக்கியவர்கள் எனக் கூறப்படுபவர்கள் சுதந்திரமாக நடமாடு கின்றார்கள். இவர்களுக்கு அரசியல் புலம் உள்ளதாக சந்தேகம் தெரிவிக்கப் படுகின்றது. மேலும் தேரர் அப்பகுதியில் மேற்கொள்ளப்படவிருந்த போராட்டத்தில் பங்கேற்பதற்கு சென்றவர்களுக்கு அறிவுரை கூறியதன் பின்விளைவே தாக்குதல் காரணமாக அமைந்திருக்கின்றது.

பொலிஸார் இவ்விடயத்தில் அமைதியாக உள்ளனர். இதில் தமண பொலிஸ் பொறுப்பதிகாரி பொறுப்புக்கூறவேண்டியவர். இவர் பாரபட்சமாக உள்ளதாகவே மக்கள் தெரிவிக்கின்றனர். இத்தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு பொலிஸார் இருக்கின்றனர். எமது நாட்டின் சட்டம் எங்கே செல்கின்றது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகின்றது.

தாக்குதல் மேற்கொண்டதாகக் கூறப்படும் 02 பேரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி பிணையில் விடுதலை செய்யப்பட்டிருப்பதாக பிந்திய தகவல் கிடைத்தது. ஆனால், இந்தத் தாக்குதல் விடயத்தில் பக்கச்சார்பாகப் பொலிஸார் நடப்பதென்பது ஏற்கமுடியாது. இவ்விடயத்தை சாதாரணமாக கடந்துவிட முடியாது. மக்கள் போராட்டம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவே இவ்விடயத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன் - என்றார்.

# இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் கலந்துரையாடல் அக்கரைப்பற்றில்



*அட்டாளைச்சேனை செய்தியாளர்*

கெப்சோ அமைப்பின் ஏற்பாட்டில் சமூகங்களுக்கிடையே உள்ள இடைவெளிகளைக் குறைத்து இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் விசேட வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் சமூக மட்டத்தில் உள்ள துறைசார்ந்தவர்களை ஒன்றிணைத்து அவர்களின் காத்திரமான கருத்துகளைக் கேட்டறியும் விசேட கலந்துரையாடல் சனிக்கிழமை(15) அக்கரைப்பற்று பிரதேசத்தில் இடம்பெற்றது.

கெப்சோ நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அமைப்பின் திட்ட ஒருங்கிணைப்பாளர் கே.எல்.எம்.அக்ரம் உள்ளிட்ட மதத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், சிவில் சமூக முக்கியஸ்தர்கள், பொதுநல அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சமூக நல்லுறவைக் கட்டியெழுப்பி சமூகங்களிடையே பரஸ்பர ஒற்றுமையான நிலைமையை நிலையாகக் கட்டியெழுப்புவதற்கு எவ்வாறான வேலைத்திட்டங்களை அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ள முடியும் என்பதை பொதுமக்களின் கருத்துகள் ஊடாக அறிந்து இதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்பகட்ட கலந்துரையாடலாய் இந்நிகழ்வு இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சமூகங்களிடையே காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளும் ஆராயப்பட்டன. இது தவிர, இன, மத நல்லுறவை மேம்படுத்துவதற்காகவும் சமூகங்களுக்கிடையே சமாதானத்தை நிலைநாட்டி ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதனூடாகவும் பிரச்சினைகளற்ற எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் வகையில் இவ்வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

அனைத்து இனத்தவர்கள் மத்தியிலும் நிரந்தர நல்லிணக்கம் மிளிர்வதற்கான நடைமுறை பற்றி இதன்போது விசேடமாகக் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கு ட்ரோன் தொழில்நுட்ப பிரயோக பயிற்சிப்பட்டறை



*அம்பாறை மாவட்ட, மாளிகைக்காடு, கல்முனை செய்தியாளர்கள்*

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கு ட்ரோன் தொழில்நுட்ப பிரயோகம் தொடர்பாக தெளிவூட்டல் மற்றும் பயிற்சியளித்தல் நிகழ்வு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறைத் தலைவர் கே.நிஜாமீர் தலைமையில் வியாழக்கிழமை (13) இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்க தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசாரபீட கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையின்போது, அனர்த்த முகாமைத்துவத்தின் ஒவ்வொரு படிமுறைகளிலும் ட்ரோன் தொழில்நுட்பத்தின் அவசியம் பற்றித் தெளிவாக விளக்கியதோடு அனர்த்த ஆபத்துகளை மாவட்டத்தில் குறைப்பதற்கான நடவடிக்கையை இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் நுட்பங்களும் இதன்போது வளவாளரால் வழங்கப்பட்டது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமிஸ் அபூபக்கர், தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசாரபீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாசில், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸ், புவியியற்றுறை பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எல்.பௌசுல் அமீர் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அம்பாறை மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களில் பணியாற்றுகின்ற அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டனர்.

# மனிதர்களின் வயதை குறைக்கும் வேதிக் கலவை

## ஹார்வர்ட் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



மனிதர்களுக்கு வயதாவதை தடுக்கும் வேதிக் கலவையை கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஹார்வர்ட் விஞ்ஞானி டேவிட் ஷின்கிளயர் தன் ட்விட்டரில், ''மரபணு சிகிச்சை மூலம் வயதைக் குறைக்க முடியும் என்பதை எங்களது முந்தைய ஆய்வில் நிரூபித்தோம். வேதிக் கலவை மூலமும் வயதைக் குறைக்க முடியும் என்பதை இப்போது நிரூபித்துள்ளோம்.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இது தொடர்பாக எங்கள் குழு தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தது. அந்த ஆராய்ச்சியின் விளைவாக வயதைக் குறைக்கும் மூலக் கூறுகளைக் கண்டுபிடித்துள்ளோம். குறைந்த விலையில் மனித செல்களுக்கு புத்துணர்வூட்டுவதற்கான ஒரு முன்நகர்வு இது'' என்று பதிவிட்டுள்ளார்.

முதற்கட்டமாக, இந்த வேதிக்கலவை எலி மற்றும் குரங்குகளுக்கு செலுத்தி பரிசோதிக்கப்பட்டுள்ளது. பரிசோதனையின் முடிவில், மூளைத் திசுக்கள், சிறுநீரகம் (கிட்னி), பார்வை ஆகியவற்றில் மேம்பாடு ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# வெள்ளத்தில் மிதக்கும் அசாம்: 40 ஆயிரம் பேர் பாதிப்பு



அசாமில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 40 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரம்மபுத்ரா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையில் அசாமின் பிஸ்வந்த் துணைப் பிரிவில் மேலும் 08 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 40 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

**வெள்ளத்தில் அள்ளுண்ட கிராமம்**

ஹிமாசலப் பிரதேசம், ஸ்பிதி பகுதிக்கு அருகே அமைந்துள்ள கோலாக்சா என்ற கிராமத்தையே, வெள்ளம் ஒட்டுமொத்தமாக அடித்துச் சென்றுள்ளது.

எனினும், குறித்த கிராம மக்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அந்த கிராமத்தில் வாழும் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அனைத்துமே தற்போது வீடற்றவர்களாக மாறியுள்ளனர்.

# இஸ்ரேல் பாதுகாப்புப் படையில் ஏஐ செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்



இஸ்ரேல் பாதுகாப்புப் படை ஏஐ (AI) எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை இராணுவத்தில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. வான்வழித் தாக்குதலின்போது இலக்குகளை தெரிவு செய்தல், போருக்கான தளவாடங்களை முறைப்படுத்துதல் போன்ற பணிகளில் இது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்தில் ஹமாஸ் கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் மறைமுகமாக ஆயுதங்கள் வழங்கி வருவதாக இஸ்ரேல் நீண்ட காலமாகவே குற்றம் சுமத்தி வருகிறது. இதன் காரணமாகவும் இஸ்ரேல் - ஈரான் இடையே மோதல் போக்கு நிலவுகிறது. இந்நிலையில், சமீப காலமாக இஸ்ரேல் - ஈரான் மோதல் வலுத்து வருகிறது. இதனையொட்டி பாதுகாப்புப் படையில் செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டை இஸ்ரேல் அதிகரித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏஐ தொழில்நுட்பப் பயன்பாட்டை உறுதி செய்துள்ள இஸ்ரேல், அது எந்தக் குறிப்பிட்ட ஒபரேஷனுக்கானது என்பதைத் தெரிவிக்கவில்லை. ஃபயர் பெக்டரி என்ற ஏஐ மாதிரியை இஸ்ரேல் பயன்படுத்துவதாக தகவல் வெளியாகியுள்ளது. இது வான்வழித் தாக்குதல் இலக்கை தெரிவு செய்து தருவதோடு, அந்தப் பகுதிக்கு எவ்வளவு வெடிப்பொருள் பயன்படுத்த வேண்டும், எந்த நேரத்தில் அவற்றைப் பிரயோகப்படுத்துவது என்பனவற்றை கணித்துத் தரும். இவை அனைத்தும் மனித மேற்பார்வையின் கீழ்தான் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

இஸ்ரேல் பாதுகாப்புப் படை அதிகாரிகள் இராணுவத்தில் ஏஐ தொழில்நுட்பம் பயன்பாடு குறித்து கோ்ணல் உரி தெரிவிக்கையில்,

"மணிக் கணக்கில் செய்த பணிகளை இனி நிமிடங்களில் முடிந்துவிடும். அதனை ஒரு சில நிமிடங்கள் மனிதர்கள் மேற்பார்வை செய்தால் வேலை முடிந்தது. இராணுவத்தில் இப்போதுள்ள ஆள் பலத்துடனேயே ஏஐ தொழில்நுட்பத்தைக் கொண்டு நிறைய செய்துவிடலாம்" - என்றார்.

ஆனால், இராணுவத்தில் ஏஐ பயன்பாடு குறித்து ஜெருசலேமிலுள்ள ஹீப்ரூ பல்கலைக்கழகத்தின் சர்வதேச சட்டத்துறை பேராசிரியர் டெல் மிம்ரான் தெரிவிக்கையில்,

"ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்போது இலக்குகளை கணிப்பதில் ஏதேனும் ஒரு தவறு நடந்துவிட்டால் யார் பொறுப்பு? ஏஐ தொழில்நுட்பத்தால் சரியாக பதிலளிக்க முடியாதபட்சத்தில் யார் மீது பழி சொல்ல முடியும்? ஒரே ஒரு தவறு ஒரு குடும்பத்தையே காலி செய்துவிடாதா?'' என்று வினவியுள்ளார்.

2021இல் இஸ்ரேல் பாதுகாப்புப் படை காஸாவில் நடந்த மோதலை தனது முதல் ஏஐ போர் என்று வர்ணித்தது. காரணம், ரொக்கெட் ஏவுதளத்தை கண்டறிதல், ஆளில்லா விமானங்களைப் பணித்தலில் அந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியதால் இவ்வாறு தெரிவித்தது.

ஈரானின் யுரேனிய அணுக் கிடங்குகள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று இஸ்ரேல் தொடர்ந்து எச்சரித்து வருகிறது. ஈரான் ஆணு ஆயுதங்களை உருவாக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்றும் தெரிவித்தது. இந்தச் சூழலில் இஸ்ரேலுக்கு எதிராக சிரியா, லெபனான், பலஸ்தீனம், ஈரான் என்று ஓரணியில் திரண்டு தாக்குதல் நடத்தலாம். 50 ஆண்டுகளுக்கு முந்தைய யோம் கிப்பூர் போர் போன்று ஒன்று நடக்கலாம் என்று அச்சப்படுவதால் ஏஐ தொழில்நுட்ப பயன்பாட்டை விரிவுபடுத்துவதாக பாதுகாப்புப் படை வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

# உலக செய்திகள்

## 2ஆவது புவிவட்ட சுற்றுப்பாதையில் சந்திரயான்-3



சந்திரயான்-3 விண்கலத்தை 2ஆவது புவிவட்ட சுற்றுப்பாதைக்கு உயர்த்தும் பணி வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக இஸ்ரோ தகவல் தெரிவித்துள்ளது.

'சந்திரயான்-3' விண்கலம் எதிர்வரும் ஓகஸ்ட் 23ஆம் திகதி மாலை 5.47 மணிக்கு நிலவில் தரையிறங்கவுள்ளது என இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

நிலவின் தென்துருவத்தையொட்டிய பகுதிகளில் ஆய்வு நடத்துவதற்காக சந்திரயான்-3 விண்கலம் எல்.வி.எம்.-3 ரொக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள இரண்டாவது ஏவுதளத்திலிருந்து வெள்ளிக்கிழமை (14) வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்நிலையில் குறைந்தபட்சம் 226 கி.மீ. தூரமும் அதிகபட்சம் 41,603 கி.மீ. தொலைவும் கொண்ட புவியின் நீள்வட்ட சுற்றுப்பாதையில் சந்திரயான்-3 விண்கலம் நிலைநிறுத்தப்பட்டது.



அரியானா மாநிலம், சோனிபட் மாவட்டத்துக்கு சென்றிருந்த ராகுல் காந்தி அங்கு விவசாயிகளுடன் சேர்ந்து, ட்ரெக்டர் ஓட்டி, நாற்று நட்டபோது...

# விபத்தில் சிக்கியோரின் உயிரை காப்பாற்றுவோருக்கு ரூ.10ஆயிரம்

வீதி விபத்தில் சிக்கியவர்களின் உயிரைக் காப்பாற்றுவோருக்கு மத்திய அரசின் ஊக்கத்தொகையுடன், மாநில அரசு சார்பில் ரூ.5 ஆயிரம் சேர்த்து, மொத்தம் ரூ.10 ஆயிரம் வெகுமதி வழங்குவதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

வெகுமதியைப் பெறுவதற்கு சில வழிகாட்டுதல்களையும் தமிழக போக்குவரத்து ஆணையகம் வழங்கியுள்ளது. அதன்படி, உயிர்களைக் காப்பாற்றுவோருக்கு விபத்து எண்ணிக்கைக்கு ஏற்ப தலா ரூ.5 ஆயிரம் வழங்கப்படும். ஒரே விபத்தில் பல உயிர்களை ஒருவர் காப்பாற்றியிருந்தால் அவருக்கு ரூ.5 ஆயிரம் வழங்கப்படும். ஒருவரின் உயிரை பலர் காப்பாற்றியிருந்தால், ரூ.5 ஆயிரம் பகிர்ந்து அளிக்கப்படும்.

ஒரே விபத்தில் பலரின் உயிரை, பலர் காப்பாற்றியிருந்தால், அவர்கள் அனைவருக்கும் தலா ரூ.5 ஆயிரம் வழங்கப்படும். ரொக்கப் பரிசுடன், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது. இந்த திட்டம் 2026ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதிவரை அமுலிலிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# விளையாட்டுத் துளிகள்

★ குஜராத்தில் உள்ள ஆரவல்லியில் 20 வயது இளைஞர் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. அவரை காப்பாற்ற முயன்றபோதும் பலனளிக்கவில்லை. இந்த அதிர்ச்சி சம்பவம் கிரிக்கெட் உலகில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

★ 25ஆவது ஆசிய தடகள சம்பியன்ஷிப் தொடர் நேற்று முன்தினம் தாய்லாந்தில் நிறைவுக்கு வந்தது. 3 தங்கம், 2 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களுடன் ஒட்டுமொத்தமாக 8 பதக்கங்களை வென்ற இலங்கை அணி புள்ளிப் பட்டியலில் ஜப்பான், சீனா மற்றும் இந்தியா ஆகிய பிரபல நாடுகளுக்குப் பிறகு 4ஆவது இடத்தைப் பிடித்து அசத்தியது. வரலாற்றில் அத்தியாயம் ஒன்றில் இலங்கை அணி வென்ற அதிகபட்ச பதக்கங்களாகவும் புள்ளிப் பட்டியலில் அதிஉயர் இடத்தையும் பிடித்து சாதனை படைத்தது.

★ விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் செக் குடியரசு வீராங்கனை மார்கெட்டா வோண்ட்ருசோவா - துனிசியா வீராங்கனை ஆன்ஸ் ஜெபர் ஆகியோர் மோதினர். இதில் வோண்ட்ருசோவா 6:4, 6:4 என்ற செட் கணக்கில் ஜெபரை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

★ ஆப்கானிஸ்தான் - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரு போட்டிகள் கொண்ட டி20 தொடர் நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்த நிலையில் தொடரை பங்களாதேஷ் அணி 2:0 என கைப்பற்றியது.

# பாக். அணியை சரிவிலிருந்து மீட்ட சக்கில் - ஆகா ஜோடி



சுற்றுலா பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் முடிவில் தங்களது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான் அணி 05 விக்கெட் இழப்புக்கு 221 ஓட்டங்களை குவித்தது.

2023 – 2025 ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 06 விக்கெட் இழப்புக்கு 242 ஓட்டங்களை குவித்தது.

நேற்று ஆட்டத்தை தொடர்ந்த இலங்கை அணி தனஞ்ஜய டி சில்வாவின் சதத்துடன் 312 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. தனஞ்ஜய டி சில்வா சதம் கடந்து 122 ஓட்டங்களையும் அஞ்சலோ மெத்யூஸ் 64 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றனர். பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் ஆடிவரும் பாகிஸ்தான் அணி ஒரு கட்டத்தில் 101 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

எனினும், சவூத் சக்கில் மற்றும் ஆகா சல்மான் ஆகியோரின் முறியடிக்கப்படாத 120 ஓட்ட இணைப்பாட்டத்துடன் நேற்றைய நாள் முடிவில் பாகிஸ்தான் அணி 05 விக்கெட் இழப்புக்கு 221 ஓட்டங்களை சேர்த்தது. சவூத் சக்கில் 69 ஓட்டங்களையும் ஆகா சல்மான் 61 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். இலங்கை அணியின் பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூரிய 03 விக்கெட்களையும் ரமேஷ் மெண்டிஸ் மற்றும் கசுன் ராஜித ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் வீழ்த்தியுள்ளனர். இன்று போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டம் தொடர்கிறது.



கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கல்முனை இஸ்லாமாபாத் விளையாட்டு கழகம் நடத்திய டி20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டு கழகத்தை வீழ்த்தி நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. இறுதி போட்டியின் சிறப்பாட்டக்காரராக நிந்தவூர் இம்ரான் அணியைச் சேர்ந்த நிஸ்கி அஹமட் தெரிவானார். **படம்:** நிந்தவூர் செய்தியாளர்

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களின் செயற்படுவோம் - மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு



கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களின் 'செயற்படுவோம் மகிழ்வோம்' விளையாட்டு நிகழ்வு பாடசாலை அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை மைதானத்தில் ஆரம்பமான நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.இரவீந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

விருந்தினர் வரவேற்கப்பட்டதையடுத்து தேசியக்கொடி ஏற்றப்பட்டதுடன் தொடர்ந்து பாடசாலைக் கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஆரம்பக் கல்வி மாணவர்களின் அணி வகுப்பு நிகழ்வினைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளும் மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஜோகோவிச்சின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விம்பிள்டன் சம்பியனான அல்காரஸ்



கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு சம்பியன் பட்டத்தை ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் முதல் முறையாக வென்று சாதனை படைத்தார். இவரை எதிர்த்து களமிறங்கிய 07 முறை சம்பியனும் 23 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவருமான செர்பியாவின் ஜோகோவிச் அதிர்ச்சி தோல்வியை தழுவினார்.

இறுதியாட்டத்தில் நேற்று முன்தினம் 36 வயதான ஜோகோவிச்சை, 20 வயதான அல்காரஸ் எதிர்கொண்டார். பரபரப்பான இந்த ஆட்டத்தில் ஜோகோவிச், முதல் செட்டை 6:1 என கைப்பற்றினார். 2ஆவது செட்டை அல்காரஸ் 7:6 என்று கைப்பற்றிய நிலையில், 3ஆவது செட்டை 6:1 என்று எளிதில் வென்றார்.

இருப்பினும், ஜோகோவிச் தன்னுடைய அனுபவத்தையும் சக்தியையும் திரட்டி 4ஆவது செட்டை 6:3 என்ற கணக்கில் தனதாக்கினார். இதனால் சம்பியனை தீர்மானிக்கும் கடைசி செட் வரை ஆட்டம் சென்றது. பரபரப்பான இந்த ஆட்டத்தில் கடைசி செட்டை 6:4 என்ற கணக்கில் கார்லோஸ் கைப்பற்றி முதல் முறையாக சம்பியன் பட்டத்தை வென்றார். இதன்மூலம் தொடர்ந்து 04 முறை விம்பிள்டன் பட்டத்தை வென்ற ஜோகோவிச்சின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.

# அல்-அஸ்திகா வெற்றிக்கிண்ணம் நிந்தவூர் காஷிபி உலமா அணி வசம்



*மீரா நகர் செய்தியாளர்*

அட்டாளைச்சேனை அல்-அஸ்திகா விளையாட்டுக் கழகத்தின் ஒரு வருட நிறைவை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசங்களை சேர்ந்த உலமாக்கள் மற்றும் ஹாபிழ்களை கொண்ட கிரிக்கெட் அணிகள் பங்கு கொண்ட அணிக்கு எட்டு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மாபெரும் கிரிக்கெட் சுற்றுத்தொடரின் சம்பியனாக நிந்தவூர் காஷிபி கிரிக்கெட் அணி தெரிவானது.

கடந்த வாரம் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் லீக் சுற்றுப் போட்டியாக நடைபெற்ற இச்சுற்றுத்தொடரில் 13 அணிகள் கலந்து கொண்டன. இதன் இறுதிப்போட்டியில் பாலமுனை மஹாஸினி உலமா அணியும் நிந்தவூர் காஷிபி உலமா அணியும் மோதிக்கொண்டதில் நிந்தவூர் காஷிபி அணி சம்பியனானது. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன் மற்றும் தொடர் ஆட்ட நாயகன் விருதினை காஷிபி அணியின் வீரர் அஸாம் (காஷிபி) பெற்றுக்கொண்டார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7